# 6

# இறைக்கொள்கையும் அரச நிதியும்

## 6.1 பொதுநோக்கு

அரசிறை மற்றும் செலவின அம்சங்கள் இரண்டிலும் காணப்பட்ட கரிசனைக்குரிய விடயங்களைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகளுடன் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் விதத்தில் இறைத் திரட்சி மீதான அரசாங்கத்தின் கொள்கைகள் 2014இலும் தொடர்ந்தன. அண்மைய கடந்த காலங்களில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரசின் அரசிறையில் காணப்படும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு இறைத் துறையில் முக்கியமான கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகின்றது. ஆகவே, வரி முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான வரிச்சீர்திருத்தங்கள், வரித் தளத்தினை விரிவாக்குதல், வரி விலக்கல்களையும் சலுகைகளையும் சிக்கனப்படுத்தல் மற்றும் வரி நிருவாகத்தினைப் பலப்படுத்துதல் என்பன 2014இலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. செலவினப் பக்கத்தில், மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களின் வினைத்திறன் மிக்க முகாமைத்துவத்தினை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. மேலும், அரசிற்குச் சொந்தமான வியாபார முயற்சிகள் அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தின் மீது ஏற்படுத்தும் சுமையினைக் குறைப்பதற்காக பல சீர்திருத்த முன்னெடுப்புக்களும் நடைமுறைக்கிடப்பட்டன. 2014இற்கான இறை முகாமைத்துவ அறிக்கையில் அறிவிக்கப்பட்ட நடுத்தர கால பேரண்ட இறைக் கட்டமைப்பு 2014 - 2017 உடன் இசைந்து செல்லும் விதத்தில் நிர்ணயிக்கப்பட்ட 2014இற்கான இறைத்துறை இலக்குகளுக்கிணங்க அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை 2013இன் மொ.உ.உற்பத்தியின் 5.9 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 5.2 சதவீதத்திற்கு குறைப்பதற்கும் மொ.உ.உற்பத்திக்கான மத்திய அரச படுகடனின் விகிதத்தினை 2013 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 78.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 74.3 சதவீதத்தில் கட்டுப்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

**எனினும், இறை இலக்குகளிலிருந்து 2014இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறை மொ.உ.உற்பத்தியின் 6.0 சதவீதத்தினை பதிவு செய்தமையின் மூலம் குறிப்பிடத்தக்க பிறழ்வொன்றினை அவதானிக்க முடிந்ததுடன் இது, கடந்த ஒரு சில ஆண்டுகளாக அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கிற்கு மாறானதாகக் காணப்பட்டது.** இது, வரி அரசிறைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக மொ.உ.உற்பத்திக்கான அரசாங்கத்தின் அரசிறை விகிதம் வீழ்ச்சியடைந்தமையின் பெறுபேறேயாகும். அதேவேளை, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் வீழ்ச்சியடைந்தமைக்கு, கடுமையான வானிலை நிலைமைகளின் விளைவாக எதிர்பாராத செலவினம் உறப்பட்ட போதும் அரசாங்கத்தினால் எதிர்நோக்கப்பட்ட வட்டிச் செலவு குறைவடைந்தமையே காரணமாகும். மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும் அதேபோன்று அரச முதலீடும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வீழ்ச்சியடைந்தமைக்கு அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சியுடன் இசைந்து செல்லும் விதத்தில் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் சிக்கனப்படுத்தப்பட்டமையே காரணமாகும். வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதில், இவ்வாண்டுப் பகுதியில் வங்கியல்லாத் துறையிலிருந்தான அரசின் கடன்பாடுகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்த வேளையில் வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகள் ரூ.126.9 பில்லியனாக விளங்கி

2014இற்கான ஆரம்ப மதிப்பீடான ரூ.100 பில்லியனை விஞ்சிக் காணப்பட்ட போதும் இது 2013இல் பதிவு செய்யப்பட்ட ரூ.297 பில்லியனைவிட குறைவானதாகவே காணப்பட்டது. எனினும், மத்திய அரசின் மொ.உ.உற்பத்திக்கான படுகடன் விகிதம் 2014 இறுதியில் 75.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, அதன் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைத் தொடர்ந்தது.

## 6.2 இறைக்கொள்கை போக்கும் வழிமுறைகளும்

**2014இல் இறைக் கொள்கையானது, வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையினை 5.2 சதவீதத்திற்கும் அரச படுகடனை மொ.உ.உற்பத்தியின் 74.3 சதவீதத்திற்கும் குறைக்கும் அதேவேளையில் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியளிக்கும் விதத்தில் திரட்சியை மேலும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தியது.** இதன்படி, அரசிறையை உயர்த்துவதற்காகவும் மீண்டெழும் செலவினத்தினை சிக்கனப்படுத்துவதற்காகவும் 2014 இற்கான வரவு செலவுத்திட்டத்தில் பல கொள்கை வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. இவ்வழிமுறைகள் நடைமுறைக் கணக்கில் மொ.உ.உற்பத்தியின் 1.1 சதவீதம் கொண்ட மிகையினை உருவாக்கும் எனவும் ஆரம்பப் பற்றாக்குறையை முன்னைய ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட மட்டமான மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்தில் பேணும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. எனினும், வளர்ச்சி உத்வேகத்திற்கு ஆதரவளிப்பதற்காக அரச முதலீடுகளை 2013இன் மொ.உ.உற்பத்தியின் 5.5 சதவீதத்திலிருந்து மொ.உ.உற்பத்தியின் 6.7 சதவீதத்திற்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச வருமானத்தில் காணப்படும் வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கு அண்மைய ஆண்டுகளில் இறைத் துறையில் முக்கிய கரிசனைக்குரியதொரு விடயமாக இருந்து வருவதனால் வரி முறைமையினை ஒழுங்குமுறைப்படுத்தும் அதேவேளையில் வரி விலக்கல்களையும் சலுகைகளையும் சிக்கனப்படுத்தும் விதத்தில் 2014இல் பல வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய, நேர் மற்றும் மறைமுக வரி வருமானங்கள் இரண்டினையும் உயர்த்துவதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. நேர் வரித் துறையில், தாழ்ந்த வரி அமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டமையின் மூலம் கம்பனி மற்றும் தனியார் வருமான வரி அமைப்பு மேலும் திரட்சிப்படுத்தப்பட்ட வேளையில் வரித்தளமும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மறைமுக வரித்துறையில் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி ஆகிய இரண்டினதும் தளம் விரிவாக்கப்பட்டது. மேலும், ஏற்கனவேயுள்ள வரி அமைப்பினை இலகுபடுத்துவதன் மூலம் வரி முறைமையின் வினைத்திறனை உயர்த்துவதற்கு பல வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்விலகுபடுத்தலின் கீழ் ஏற்கனவேயுள்ள, குறிப்பாக இறக்குமதி மீதான பல்முறை வரிகளின் அமைப்பானது, தனியொரு வரிமுறைக்கு மாற்றியமைக்கப்பட்டது. அதேநேரம், வரிச் சேகரிப்பு முகவர்களின் வரி நிருவாகத்தினை வலுப்படுத்துவதன் மீது வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

**சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகளுக்கான வருமான வரி அமைப்பு மேலும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வேளையில், தொழில்சார் நிபுணர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டன.** இதற்கமைய, வேறுபட்ட துறைகளுக்கு ஏற்புடைத்தான கம்பனி வருமான வரி வீதங்களில் ஒருமுகத்தன்மையினைப் பேணும் பொருட்டு வருடாந்த மொத்தப் புரள்வு ரூ.500 மில்லியனை விஞ்சாத வியாபார நிறுவனங்களுக்காக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் மீதான வருமான வரி வீதங்கள் 10 சதவீதத்திலிருந்து 12 சதவீதத்திற்கு மேல் நோக்கித் திருத்தப்பட்டன. கப்பற்படுத்தல் தொழில் துறையில் தேர்ச்சி அபிவிருத்திக்கான பயிற்சியை வழங்குகின்ற வெளிநாட்டுக் கப்பல்களின் கப்பல் தொழிற்பாட்டாளர் அல்லது முகவர்களுக்கு ஏற்புடைத்தான வருமான வரியில் 10 சதவீதக் குறைப்பு வழங்கப்பட்டது. தொழில்சார் நிபுணத்துவ பணிகளின் இலாபம் மற்றும் வருமானத்திற்கு ஏற்புடைத்தான உயர்ந்தபட்ச வீதம் 24 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டது. மேலும், தொழில்சார் நிபுணர்களுக்கான வதிவிட தொடர்மாடிகளுக்காக வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன் வசதிகள் மீதான வட்டி மீது ஏற்புடைத்தான வருமான வரியில் அரைப்பங்கினை மட்டுமே செலுத்த பொறுப்புடையதாக்கப்பட்டது. மேலும், உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிகூட்டப்பட்ட பணிகளை வழங்குவதற்காக தொழில்சார் நிபுணர்களினால் உருவாக்கப்பட்ட கம்பனி முயற்சிகளுக்கு, அத்தகைய

வரைபடம் 6.1 முக்கிய இறைக் குறிக்காட்டிகள் (மொ.உ.உ.இன் சதவீதமாக)



கம்பனிகளுக்கு ஏற்புடைத்தான வருமான வரியிலிருந்து 50 சதவீதக் குறைப்பினை ஐந்தாண்டு காலப்பகுதிக்கு வழங்கியதன் மூலம் அவர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறையினை அதிகரிப்பதற்காக பலவழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** இதற்கமைய, வரிச் சேகரிப்பினை உயர்த்துவதற்காக பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றின் தளம் மேலும் விரிவாக்கப்பட்டது. மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்தின் மீது பெறுமதிசேர் வரியின் விதிப்புக்கள் பிரயோகிக்கத்தக்க காலாண்டு புரள்வு ரூ.500 மில்லியனிலிருந்து ரூ.250 மில்லியனுக்குக் குறைக்கப்பட்ட வேளையில் பெறுமதிசேர் வரி விலக்கல் தொகை வழங்கல்களின் மொத்தப் பெறுமதியில் 25 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. மேலும், வங்கிகளுக்கும் நிதியியல் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி விலக்கல்கள் நீக்கப்பட்டமையும் வரித் தளம் விரிவாக்கப்பட்டமைக்கு பக்கபலமாக விளங்கியது. சிறப்புத் பண்டத் தீர்வை செலுத்துவதற்குப் பொறுப்பான பொருட்களின் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான விலக்களிப்பானது, சுங்க நிலையத்தில் செலுத்தப்பட வேண்டிய தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதன்படி உள்நாட்டுப் பொருட்களின் வழங்கலானது தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தளத்தை விரிவாக்குவதற்கு ஆதரவளிப்பதற்காக தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியைச் செலுத்துவதற்கு பொறுப்புடையதாக்கப்பட்டது. மேலும், வெளிநாட்டு நாணயப்பெறுகைகளை மேலும் ஊக்குவிப்பதற்காக இலங்கையில் மீளமைக்கப்பட்ட பன்னாட்டு வலையமைப்பிலுள்ள நிறுவனங்களின் ஏதாவது தலைமையகங்கள் அல்லது பிராந்திய அலுவலகங்கள் பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி இரண்டிலிருந்தும் விலக்களிக்கப்பட்டன.

**இறக்குமதி செய்யப்படும் நேரத்தில் விதிக்கப்படும் பல வரிகளை அகற்றியதன் மூலம் அரசிறை சேகரிப்புக்களை உயர்த்துவதற்காக உந்து ஊர்திகள், சிகரட்டுக்கள் மற்றும் குடிவகை மீதான வரி அமைப்புக்கள் மேலும் இலகுபடுத்தப்பட்டன.** இதன்படி, சுங்கத் தீர்வை, துறைமுகங்கள் மற்றும் வானூர்தி நிலைய அபிவிருத்தித் தீர்வை, செஸ் தீர்வை, பெறுமதிசேர் வரி, உந்து ஊர்திகளின் இறக்குமதி மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பனவற்றிற்குப் பதிலாக உந்து ஊர்திகளின் மீது உயர்ந்த வீதத்தில் தனியொரு கலால் (சிறப்பு ஏற்பாடுகள்) தீர்வை விதிக்கப்பட்டது. மேலும், பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்கு பதிலாக சிகரெட்டின் இறக்குமதி மற்றும் உற்பத்தி இரண்டின் மீதும் உயர்ந்தளவிலான கலால் தீர்வை

**அட்டவணை 6.1 அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு**

| விடயம் | 2013 | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2014 தற்காலிக மானவை | 2015 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| ரூ.மில்லியன் | | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **1,153,306** | **1,469,493** | **1,204,621** | **1,534,700** |
| மொத்த அரசிறை | 1,137,447 | 1,437,493 | 1,195,206 | 1,504,700 |
| வரி அரசிறை (அ) | 1,005,895 | 1,274,600 | 1,050,362 | 1,337,000 |
| வரியல்லா அரசிறை | 131,552 | 162,893 | 144,844 | 167,700 |
| கொடைகள் | 15,859 | 32,000 | 9,415 | 30,000 |
| **மீள்கொடுப்பனவைக் கழித்த செலவினமும் கடன் வழங்கலும்** | **1,669,396** | **1,985,619** | **1,795,865** | **2,034,076** |
| மீண்டெழும் | 1,205,180 | 1,328,283 | 1,322,898 | 1,552,035 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கல்களும் | 464,216 | 657,336 | 472,967 | 482,041 |
| இதில் அரச முதலீடு | 481,203 | 668,465 | 486,610 | 492,341 |
| **நடைமுறைக்கணக்கு மிகை(+)/பற்றாக்குறை(-)** | **-67,733** | **109,210** | **-127,692** | **-47,335** |
| **முதன்மைக்கணக்கு மிகை(+)/பற்றாக்குறை(-)** | **-72,083** | **-75,091** | **-154,849** | **-74,346** |
| **திரண்ட வரவு செலவு திட்ட மிகை(+)/பற்றாக்குறை(-)** | **-516,090** | **-516,126** | **-591,244** | **-499,376** |
| **மொத்த நிதியிடல்** | **516,090** | **516,126** | **591,244** | **499,376** |
| வெளிநாட்டு நிதியிடல் (ஆ) | 123,700 | 286,850 | 212,523 | 291,376 |
| உள்நாட்டு நிதியிடல் (இ) | 392,390 | 229,276 | 378,721 | 208,000 |
| சந்தைக் கடன்பாடுகள் | 379,390 | 229,276 | 392,084 | 208,000 |
| வங்கியல்லா | 82,414 | 129,276 | 265,155 | 138,000 |
| வங்கி | 296,977 | 100,000 | 126,929 | 70,000 |
| நாணய அதிகார சபை | -164,836 | வி.கி | 35,665 | வி.கி |
| வர்த்தக வங்கிகள் | 461,813 | வி.கி | 91,264 | வி.கி |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | 13,000 | - | -13,363 | - |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | | |
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **13.3** | **14.8** | **12.3** | **13.6** |
| மொத்த அரசிறை | 13.1 | 14.5 | 12.2 | 13.3 |
| வரி அரசிறை (அ) | 11.6 | 12.8 | 10.7 | 11.8 |
| வரியல்லா அரசிறை | 1.5 | 1.6 | 1.5 | 1.5 |
| கொடைகள் | 0.2 | 0.3 | 0.1 | 0.3 |
| **மீள்கொடுப்பனவைக் கழித்த செலவினமும் கடன் வழங்கலும்** | **19.2** | **20.0** | **18.3** | **18.0** |
| மீண்டெழும் | 13.9 | 13.4 | 13.5 | 13.7 |
| மூலதனமும் தேறிய கடன் வழங்கல்களும் | 5.4 | 6.6 | 4.8 | 4.3 |
| இதில் அரச முதலீடு | 5.5 | 6.7 | 5.0 | 4.3 |
| **நடைமுறைக்கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-0.8** | **1.1** | **-1.3** | **-0.4** |
| **முதன்மைக்கணக்கு மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-0.8** | **-0.8** | **-1.6** | **-0.7** |
| **திரண்ட வரவு செலவு திட்ட மிகை (+)/ பற்றாக்குறை (-)** | **-5.9** | **-5.2** | **-6.0** | **-4.4** |
| **மொத்த நிதியிடல்** | **5.9** | **5.2** | **6.0** | **4.4** |
| வெளிநாட்டு நிதியிடல் (ஆ) | 1.4 | 2.9 | 2.1 | 2.6 |
| உள்நாட்டு நிதியிடல் (இ) | 4.5 | 2.3 | 3.9 | 1.8 |
| சந்தைக் கடன்பாடுகள் | 4.4 | 2.3 | 4.0 | 1.8 |
| வங்கியல்லா | 1.0 | 1.3 | 2.7 | 1.2 |
| வங்கி | 3.4 | 1.0 | 1.3 | 0.6 |
| நாணய அதிகார சபை | -1.9 | வி.கி | 0.4 | வி.கி |
| வர்த்தக வங்கிகள் | 5.3 | வி.கி | 0.9 | வி.கி |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் | 0.1 | - | -0.1 | - |

(அ) குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரிவிலக்கு அளவு மற்றும் அரச ஊழியர்களால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் அளவு உள்ளடங்களாக.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர், வெளிநாடுகளில் வதியும் இலங்கையர்கள் மற்றும் புலம்பெயர் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் உள்ளடக்குகின்றது.

(இ) அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களை மீளமைப்பதற்காக 2014இல் திரட்டப்பட்ட ரூ.68.7 பில்லியன் நிதிகள் நீங்கலாக

மூலம் : நிதி அமைச்சு

அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும் குடிவகைத் தயாரிப்பு மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்கு பதிலாக கலால் (கட்டளை) தீர்வை விதிக்கப்பட்ட வேளையில் குடிவகையின் இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி என்பவற்றிற்கு பதிலாக சுங்கத் தீர்வையும் செஸ் தீர்வையும் விதிக்கப்பட்டன.

**இவ்வாண்டுக் காலப்பகுதியில் சிறப்புப் பண்டத் தீர்வை காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டமையானது, உள்நாட்டு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பினை வழங்கிய வேளையில் உள்நாட்டுச் சந்தையில் பண்ட விலைகளின் தளம்பலையும் குறைத்திருந்தது.** இதன்படி, உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், அரிசி, பயறு, பருப்பு மற்றும் பட்டாணி உள்ளிட்ட பல்வேறு பண்டங்களின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வையானது உள்நாட்டுச் சந்தையில் அத்தகைய பண்டங்களின் கிடைப்பனவைப் பொறுத்து காலத்திற்குக் காலம் சீராக்கப்பட்டது. உள்நாட்டுச் சந்தையில் காணப்பட்ட வழங்கல் பற்றாக்குறையினை பூர்த்தி செய்வதற்கு இறக்குமதியினைத் தூண்டுவதற்காக, கி.கிறாமொன்றிற்கான ரூ.20 கொண்ட சுங்கத் தீர்வை, 12 சதவீதம் கொண்ட பெறுமதிசேர் வரி, 2 சதவீதம் கொண்ட தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் 5 சதவீதம் கொண்ட துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தி தீர்வை என்பனவற்றிற்குப் பதிலாக 2014 ஏப்பிறலில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் மீது கி.கிறாமொன்றிற்கு ரூ.5 கொண்ட தாழ்ந்த வரி வீதம் விதிக்கப்பட்டது. மேலும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் மீதான வரி முறைமையில் திரட்சிச் செயன்முறையினை மேலும் வலுப்படுத்தும் பொருட்டு சோளம் மற்றும் தானிய இறுங்கு வகைகளைப் பொறுத்தவரையில் பெறுமதிசேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி, துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை, சுங்கத் தீர்வை மற்றும் செஸ் தீர்வை என்பனவற்றிற்குப் பதிலாக சிறப்புப் பண்டத் தீர்வை விதிக்கப்பட்டது.

**2014 காலப்பகுதியில் வரி நிருவாகத்தினை மேம்படுத்துவது தொடர்பில் தொடர்ந்தும் வலியுறுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன.** தற்பொழுது இடம்பெறும் அரசிறை நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் நடைமுறைப்படுத்தலுடன் இசைந்து செல்லும் விதத்தில் வெளிவாரி இடைமுகத்தினை உள்நாட்டு அரசிறைத் திணைக்களத்துடன் இணைப்பதற்காக வரி செலுத்துவோருக்கு தனி அடையாள இலக்கமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. இலங்கைச் சுங்கமும் ஏற்றுமதியாளர்களுக்கு வினைத்திறன்மிக்க பணிகளை வழங்கும் பொருட்டு 24 மணித்தியால முழுமையாக தன்னியக்கப்படுத்தப்பட்ட தொழிற்பாட்டு முறைமையொன்றினை ஏற்றுமதி ஆவணங்களை செய்முறைப்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தியது. மேலும், ஏற்றுமதியாளர் மற்றும் இறக்குமதியாளர் இருவரினதும் வரி இணங்குவிப்புக்களைக் கண்காணிப்பதற்காக இலங்கைச் சுங்கத்தினால் இடர்நேர்வு முகாமைத்துவப் பிரிவொன்று நிறுவப்பட்டது. அரசிறையை முகாமைப்படுத்தல், நிதியியல் திட்டங்களைத் தயாரித்தல், ஆண்டு வரவு செலவுத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்தல் மற்றும் செலவினங்களின் பொறுப்புக்கூறல் போன்றவற்றின் நோக்கில் ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறையொன்றுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு நிதி திட்டமிடல் அமைச்சு ஒன்றிணைக்கப்பட்ட திறைசேரி முகாமைத்துவ முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கான ஆயத்தங்களைத் தொடர்ந்தது.

**செலவினப் பக்கத்தில், மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவுகளை முகாமைப்படுத்துவதனை மேம்படுத்துவதற்காக 2014இல் பல்வேறு வழிமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.** தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை எண் 1/2014 இன்படி, அனைத்துச் செலவிடல் முகவர்களும் மேலதிக நேர வேலை, எரிபொருள், மின்வலு, நீர், போக்குவரத்து மற்றும் வெளிநாட்டுப் பயணம் போன்றவற்றுடன் தொடர்பான செலவினங்களில் விசேட கவனத்தினைச் செலுத்தி அவர்களது மீண்டெழும் மற்றும் மூலதனச் செலவினங்களை, 2014 வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்குள் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டன. இதற்கமைய, மேலதிக நேரக் கொடுப்பனவுகள் விசேட மற்றும் இன்றியமையாத சந்தர்ப்பங்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருக்கும் எனவும் வரவு செலவுத்திட்ட ஒதுக்குகளுக்குள் பேணப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. எரிபொருள், மின்வலு மற்றும் நீர் என்பனவற்றிற்கான பட்டியல்களை உரிய நேரத்தில் செலுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது. எரிபொருள் படிகளைக் கணித்தல் மற்றும் அலுவலர்கள் பணிகளுக்கு ஊர்திகளைப் பயன்படுத்தல் என்பன தொடர்பில் பிரமாணங்களைக் குறித்துரைப்பதன் மூலம் அரச ஊழியர்களின் எரிபொருள் படியினை உரிய முறையில் முகாமைப்படுத்துவதற்காக பல்வேறு வழிகாட்டல்கள் விடுக்கப்பட்டன.

**2014 வரவு செலவுத்திட்டத்தில் அரச துறை ஊழியர்களின் சம்பளங்கள், கூலிகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.** அரச ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படி 2014 சனவரியிலிருந்து மாதமொன்றிற்கு ரூ.1,200 இனால் ரூ.7,800 இற்கு அதிகரிக்கப்பட்டது. அதேவேளை, 2006 இற்கு முன்னர் ஓய்வுபெற்ற ஓய்வூதியக்காரர்களுக்கு செலுத்தப்படும் வாழ்க்கைச் செலவுப்படி மாதமொன்றிற்கு ரூ.500 இனால் ரூ.3,675 இற்கு அதிகரிக்கப்பட்டதுடன் மற்றவர்களுக்கு மாதமொன்றிற்கு ரூ.350 இனால் ரூ.3,525 இற்கு அதிகரிக்கப்பட்டது. முகாமைத்துவப் பணிகள் சுற்றறிக்கை இல. 02/2014 இற்கமைய, பொது அரச பணிகளிலுள்ள தகுதியான அலுவலர்களுக்கு செலுத்தப்படும் ஆராய்ச்சிக்கான படி 2014 சனவரி 01ஆம் நாள் தொடக்கம் அவர்களது ஆரம்ப சம்பளத்தின் 25 சதவீதத்திலிருந்து 35 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது.

**அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் தற்பொழுது இடம் பெற்றுவரும் பாரியளவு உட்கட்டமைப்புச் செயற்றிட்டங்களை விரைவுபடுத்துவதனை இலக்காகக் கொண்டிருந்தது.** இதற்கமைய, அரசு விரைவுப் பாதை மற்றும் நெடுஞ்சாலை செயற்றிட்டங்களுடன் தொடர்ந்து இடம்பெற்றுவரும் முதலீடுகளுடன் பிராந்திய இணைப்புக்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது. மேலும், வலு மற்றும் சக்தி, துறைமுகங்கள், வானூர்திநிலையங்கள் மற்றும் நீர்வழங்கல் செயற்றிட்டங்கள் உட்பட பிராந்திய மற்றும் தேசிய உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்வதற்கு அரச முதலீடுகள் வழிப்படுத்தப்பட்டன. சமூக உட்கட்டமைப்பினை பொறுத்தவரையில், மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு உதவுகின்ற விதத்தில் இவ்வாண்டுப் பகுதியில் நலத்துறை மற்றும் கல்வித் துறையின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி விரைவுபடுத்தப்பட்டது. கிராமிய வீதிகளின் அபிவிருத்தி, நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசன வசதிகள் என்பன மீதான வலியுறுத்தல்களுடன் கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் தொடர்ந்தன.

**அரசாங்கம், திவி நெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம், குடிசைக் கைத்தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வீட்டில் பராமரிக்கப்படுகின்ற பாற்பண்ணை நடவடிக்கைகள் அதேபோன்று சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் துறை போன்ற வாழ்வாதார அபிவிருத்தி முயற்சிகளுக்காகத் தொடர்ந்தும் மூலவளங்களை வழிப்படுத்தியது.** சிறிய மற்றும் நடுத்தர பாற்பண்ணைகளை ஊக்குவிக்கும் பொருட்டு உயர்ந்த இனப் பசுக்களை இறக்குமதி செய்வதற்காக நிதியங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாற்பண்ணைத் துறையிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு உதவியாகவும் பாற்பண்ணை, சேகரிப்பு நிலையங்கள், சாதனங்கள் மற்றும் விலங்குத்தீனினை விருத்தி செய்தல் என்பனவற்றை ஊக்குவிப்பதற்காகவும் விசேட குறைந்த வட்டி கடன் திட்டமொன்று நடைமுறைக்கிடப்பட்டது. தேவையான பிணையங்கள் இல்லாமல் பெண் தொழில்முயற்சியாண்மையாளர்களுக்கு தொழிற்படு மூலதன உதவிகளை வழங்குவதற்காக பிரதேச அபிவிருத்தி வங்கிகளினூடாக மகளிர் நுண்பாக தொழில்முயற்சி கொடுகடன் உத்தரவாதத்திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

**அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மத்திய அரச வரவு செலவுத்திட்டத்தில் தங்கியிருக்கும் தன்மையினைக் குறைப்பதற்காக அவற்றின் ஐந்தொகையை வலுப்படுத்தும்பொருட்டு 2014ஆம் ஆண்டுப் பகுதியில் பல சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்பட்டன.** அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் ஐந்தொகையினை வலுப்படுத்துவதற்கு பின்பற்றப்பட்ட முக்கிய வழிமுறைகளாக மூலதனத்தினை உள்ளீடு செய்தல், வெளிநின்ற படுகடனை அரசாங்க பங்குரிமைகளாக மாற்றுதல், நீண்ட கால படுகடனைத் தீர்த்தல் மற்றும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் காணப்படும் செயற்படாத முதலீடுகளை மீண்டும் வாங்கிக் கொள்ளுதல் என்பன காணப்பட்டன. இலங்கை மின் சபையின் நிதியியல் நிலைமை திறைசேரிக் கடன்களை பங்குரிமை மூலதனமாக மாற்றியதன் மூலம் வலுப்படுத்தப்பட்டது. மேலும், இலங்கை மின் சபையினதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கடந்த கால இழப்புக்களை ஈடுசெய்வதற்காக செலவினைப் பிரதிபலிக்கும் விலையிடல் உபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. அரசாங்கம் சிறிலங்கன் எயார்லைன்சுக்கும் மிகின் லங்காவிற்கும் மூலதனத்தினை உள்ளீடு செய்தது. அதேவேளை, 2014 செத்தெம்பரில் சிறிலங்கன் எயார்லையின்ஸ் மீள்தொகுதிப்படுத்தல் நோக்கங்களுக்காக ஆண்டொன்றிற்கு 5.30 சதவீத விளைவு வீதத்தில் ஐ.அ.டொலர் 175 மில்லியன் பெறுமதி கொண்ட 5 ஆண்டு கால பன்னாட்டு முறிகளை வழங்கியதுடன் தேசிய சேமிப்பு வங்கி முக்கியமாக அரசுடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கும் அரசுடன் தொடர்புபட்ட செயற்றிட்டங்களுக்கும் கடன் வழங்குவதற்காக ஆண்டொன்றிற்கு 5.15 சதவீத விளைவு வீதத்தில் 2014 செத்தெம்பரில் ஐ.அ.டொலர் 250 மில்லியன் கொண்ட 5 ஆண்டு கால பன்னாட்டு முறிகளை வழங்கியது.

**அரச படுகடன் முகாமைத்துவ உபாயமானது சாத்தியமான குறைந்த செலவில் அரசின் நிதியியல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் அதேவேளை இடர்நேர்வினைக் குறைப்பதன் மீது கவனத்தினைச் செலுத்தியது.** உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகளின் உத்தம கலப்பொன்றைப் பேணுவதற்கும் படுகடன் சொத்துப்பட்டியலில் காணப்பட்ட முதிர்ச்சிப் பொருத்தப்பாடின்மையினைக் குறைப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இதற்கமைய, படுகடனின் மீண்டும் மீண்டும் ஏற்படக்கூடிய இடர்நேர்வுகளைக் குறைப்பதற்காக, முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்கள் நடுத்தரத்திலிருந்து நீண்ட கால திறைசேரி முறிகளின் மூலம் பதிலிடப்பட்ட வேளையில் உள்நாட்டுப் படுகடன் சொத்துப்பட்டியலின் சராசரி முதிர்ச்சிக் காலம் அதிகரிக்கப்பட்டது. இதன்படி, 2014இல் 30 ஆண்டுகள் முதிர்ச்சியுடன் கூடிய ரூ.82.5 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிகள் வழங்கப்பட்டன. தாழ்ந்த மற்றும் உறுதியான பணவீக்கத்தினால் ஆதரவளிக்கப்பட்ட குறைந்த வட்டிச்சூழலும் சந்தையில் நிலவிய உயர்ந்த மிகையான திரவத்தன்மையும் நீண்ட கால திறைசேரி முறிகளை வழங்க உதவியாக அமைந்தன.

**2014இல் அரசாங்கம் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வழங்கலிலிருந்து ரூ.1.5 பில்லியனைத் திரட்டிக் கொண்டது.** 2014ஆம் ஆண்டிற்கான ஒப்புதலளிக்கப்பட்ட நாட்டிற்கான

பன்னாட்டு முறிகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அரசாங்கம் 2014 சனவரியில் ஆண்டொன்றிற்கு 6 சதவீத விளைவு வீதத்தில் 5 ஆண்டுகள் முதிர்ச்சிகளுடன் கூடிய ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளை வழங்கியதுடன் இது முன்னைய ஐந்து ஆண்டு கால வழங்கலை விட குறைந்த விளைவு வீதத்தைக் கொண்டதாகும். இதனைத் தொடர்ந்து 2014 ஏப்பிறலில் ஆண்டொன்றிற்கு 5.125 சதவீத விளைவு வீதத்தில் ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட மிகுதி முறிகள் வழங்கப்பட்டன. இது பன்னாட்டு முறிகள் சந்தையில் இலங்கையினால் முன்வைக்கப்பட்டவற்றுக்குள் மிகக்குறைந்த வீதமாக விளங்கியது.

**2014ஆம் ஆண்டுப் பகுதியில், பன்னாட்டுத் தரமிடல் முகவர்கள் இலங்கையின் தற்போதைய நாட்டிற்கான தரமிடலை உறுதிப்படுத்தியுள்ளனர்.** மூடி இன்வெஸ்டர் சேர்விஸ் உறுதியான தோற்றப்பாட்டுடன் கூடிய விதத்தில் இலங்கையின் நாட்டிற்கான தரமிடலை 'பீ1' இல் உறுதிப்படுத்தியது. பிட்ஜ் றேட்டிங் அதன் தற்போதைய 'பீபீ-' இனை உறுதிப்படுத்தியதுடன், இலங்கையின் பொருளாதாரத்திற்கான உறுதியான தோற்றப்பாடானது, ஒப்பீட்டு ரீதியில் பலயீனமான அரச நிதி காணப்பட்டமைக்கிடையிலும் அதன் அயல்நாடுகளுடன் ஒப்பிடுகையில் நாட்டின் மொ.உ.உற்பத்தி வளர்ச்சியில் உயர் மற்றும் தாழ்ந்த தளம்பல்களை அவதானித்திருக்கிறது. அதேபோன்று ஸ்டான்டட் அன்ட் புவர் றேட்டிங் சேர்விஸஸ் நாட்டிற்கான தரமிடலாக நீண்ட காலத்திற்காக 'பீ+' இனையும் குறுங்காலத்திற்காக 'பீ' இனையும் உறுதிப்படுத்தியுள்ளதுடன் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தமட்டச் செல்வம், மிதமான பலயீனங்களைக் கொண்ட வெளிநாட்டு திரவத்தன்மை, உயர்ந்தமட்ட அரச படுகடன் மற்றும் வட்டிச் சுமை என்பனவற்றை எடுத்துக்காட்டியது.

**அதேவேளையில், 2015இற்கான வரவு செலவுத் திட்டத்தில் இறைத்துறையில் மேலதிக ஒருங்கிணைப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.** 2014 நவெம்பரில் இறை ஒருங்கிணைப்பு செயற்பாட்டை தொடர்ச்சிப்படுத்தும் நோக்குடனான 2015இற்கான வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது. இந்நோக்கில் பொதுச் செலவின முகாமைத்துவத்தை மேம்படுத்த எதிர்பார்க்கும் அதேவேளை அரசிறை முறைமையை இலகுபடுத்தல் மற்றும் அரசிறை தளத்தினை விரிவுபடுத்தல் ஆகியவற்றிற்கூடாக அரச வருமானத்தை விரிவுபடுத்துவதற்கான பல்வேறு கொள்கை வழிமுறைகள் முன்மொழியப்பட்டன. நாட்டினுடைய நடுத்தர காலப்பகுதிக்கான வளர்ச்சி வாய்ப்புக்களை வசதிப்படுத்துவதற்கு ஒரு உயர்ந்த மட்டத்திலான பொதுத்துறை முதலீடு எதிர்பார்க்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 2015 சனவரியில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான புதிய அரசாங்கத்தால் 29 சனவரி 2015இல் சமர்ப்பிக்கப்பட்ட 2015 இற்கான இடைக்கால வரவு செலவுத்திட்டம், வாழ்க்கைச் செலவு மற்றும் வருமான சமமின்மையைச் குறைப்பதற்கான பல்வேறு வழிமுறைகளை அறிமுகப்படுத்தியதுடன் இறைத்துறை ஒருங்கிணைப்பை மேலும் வலுப்படுத்துவதற்கான உள்நோக்கத்தையும் வெளியிட்டது. இறைவரித் தளத்தினை விரிவுபடுத்தல் மற்றும் இறைவரி நிர்வாகத்தை முன்னேற்றுதல் ஆகியவற்றினூடாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக நேர் வரி வருமானத்தை அதிகரிப்பதை இடைக்கால வரவு செலவுத்திட்டம் மையப்படுத்தியது. மேலும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறைவரி வருமானத்தை வலுவாக்கும் நடவடிக்கைகள் வருங்காலத்தில் அறிமுகப்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மீண்டெழும் செலவினத்தை மேலும் ஒழுங்குபடுத்துவதற்கு கவனம் செலுத்துகின்ற அதேவேளை, பொருளாதார நடவடிக்கைகளில் தனியார் துறைகளின் அதிகரித்த பங்களிப்புடன் பொதுத்துறை முதலீடு குறைந்த மட்டத்தில் இருக்குமென எறிவு செய்யப்பட்டது. இதற்கமைவாக இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 2015 இற்கான மொத்த வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையானது 2015இற்கான மூல வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட மொ.உ.உற்பத்தியின் 4.6 சதவீதத்துடன் ஒப்பிகையில் மேலும் குறைவடைந்து 4.4 வீதத்திற்கு எறிவு செய்யப்பட்டது.

**இறைத் தொழிற்பாடுகள் எதிர்காலத்தில் பெரும் எண்ணிக்கையான சவால்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் போல் தெரிகிறது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச அரசிறையில் காணப்பட்ட வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கானது தொடர்ச்சியான இறைத் திரட்சிச் செயற்பாட்டினைத் தடைப்படுத்தக் கூடுமென்பதனால் இதனை அவசரமாகக் கட்டுப்படுத்துதல் வேண்டும். மேலும், கட்டுப்படுத்தப்பட்ட இறை நிலைமை, நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான மூலதனச் செலவினை நோக்கி போதுமானளவு நிதியினை வழிப்படுத்துவதனை கடினமாக்கக்கூடும். எனவே, அரசிறைச் செயலாற்றத்தினை உயர்த்துவதற்கு முன்னேற்றகரமான வழிமுறைமைகளை வரைகின்ற வேளையில் மீண்டெழும் செலவினத்தினைச் சிக்கனப்படுத்துவதும் அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழிற்பாடுகள் அரச வரவு செலவுத்திட்டத்தில் தங்கியிருப்பதனைக் குறைப்பதும் அவசியமானதாகும்.

## 6.3 அரசாங்க வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### அரசிறையும் கொடைகளும்

#### அரசிறை

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச அரசிறை 2014இல் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தமைக்கு வரி அரசிறைச் சேகரிப்பின் மோசமான செயலாற்றமே காரணமாகும்.** இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த அரச

அரசிறை முன்னைய ஆண்டின் 13.1 சதவீதத்திலிருந்து 2014இல் 12.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரி அரசிறை 2013இன் 11.6 சதவீதத்திலிருந்து 10.7 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வரியல்லா அரசிறை 1.5 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும், பெயரளவு நியதிகளில் மொத்த அரசிறை 2013இன் ரூ.1,137.4 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,195.2 பில்லியனுக்கு 5.1 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு மறைமுக வரி அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமான காரணமாக இருந்த வேளையில், கம்பனி மற்றும் கம்பனியல்லா வருமான வரி, தனியாள் வருமான வரி, பிடித்துவைத்தல் வரி, பொருளாதாரப் பணிக் கட்டணம் போன்ற நேர் வரிகள் வடிவில் உருவாக்கப்பட்ட அரசிறை வீழ்ச்சியடைந்தது. பெயரளவு நியதிகளில் வரியல்லா அரசிறை, முன்னைய ஆண்டின் 7.7 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 2014இல் ரூ.144.8 பில்லியனுக்கு 10.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழிற்முயற்சிகளிலிருந்தான அதிகரித்த இலாபங்களும் பங்கிலாபங்களின் மாற்றல்களுமே முக்கிய காரணமாகும். மேலும், 2014இல் மொத்த அரச அரசிறை 2014இற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.1,437.5 பில்லியனை விட குறிப்பிடத்தக்களவு குறைவாகவே காணப்பட்டது.

**மொ.உ.உற்பத்திக்கான வரி அரசிறை விகிதம் 2014இலும் தொடர்ந்தும் குறைவடைந்ததுடன், இது 2013இன் 11.6 சதவீதத்திலிருந்து 2014இல் 10.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** எனினும், பெயரளவு நியதிகளில் வரி அரசிறை 2013இல் பதிவு செய்யப்பட்ட ரூ.1,005.9 பில்லியனிலிருந்து ரூ.1,050.4 பில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் அதிகரித்தது. மறைமுக வரிகளிலிருந்தான அரசிறை, வரி அரசிறையில் முக்கிய மூலமாக விளங்கி இவ்வாண்டுப் பகுதியில் 6.5 சதவீதத்தினால் அதிகரித்ததுடன் மொத்த வரி அரசிறையில் 81.1 சதவீதத்திற்கு

வரைபடம் 6.2 அரச வருமானத்தின் உள்ளடக்கம் - 2014




வகைகூறியது. இதன்படி, உள்நாட்டு நடவடிக்கைகள் மற்றும் இறக்குமதிகள் இரண்டின் மீதான பெறுமதிசேர் வரி, குறிப்பாக குடிவகை, உந்து ஊர்திகள் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வை அதேபோன்று தொலைத்தொடர்பூட்டல் தீர்வை, துறைமுக மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தித் தீர்வை மற்றும் செஸ் தீர்வை என்பனவற்றை உள்ளடக்கிய முக்கிய மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்புக்கள் 2014இல் அதிகரித்தன. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் அதேபோன்று பெயரளவு நியதிகளிலும் நேர் வரிகளிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்த வேளையில் வரி அரசிறைக்கான பங்களிப்புக்கள் 2013இன் 20.4 சதவீதத்திலிருந்து 18.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொத்த அரசிறையில் வரி அரசிறையின் பங்கு முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 88.4 சதவீதத்திலிருந்து 2014இல் 87.9 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் அதேபோன்று பெயரளவு நியதிகளிலும் வருமான வரிகளிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி தவிர மற்றைய அனைத்து வருமான வரி வகைகளிலும் ஏற்பட்ட அரசிறை வீழ்ச்சிகளைப் பிரதிபலித்தது.** இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வருமான வரி சேகரிப்பு 2013இல் பதிவு செய்யப்பட்ட 2.4 சதவீதத்திலிருந்து 2014இல் 2.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில், பெயரளவு நியதிகளில் இது முன்னைய ஆண்டின் ரூ.205.7 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.198.1 பில்லியனுக்கு 3.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உழைக்கும் போதே செலுத்தும் வரியிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை 2013இன் ரூ.18.6 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.22.3 பில்லியனுக்கு 20.1 சதவீதம் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதற்கு கணக்காய்வுச் செயன்முறை வலுவாக்கப்பட்டதன் காரணமாக உழைக்கும் போதே செலுத்தும் வரித்தளம் அதிகரித்தமையும் தொழில்சார் பணிகள் மற்றும் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் கட்டுமானத் துறைகளிலிருந்தான உழைக்கும் போதே செலுத்தும் வரியின் பங்களிப்பு அதிகரித்தமையும் முக்கிய காரணங்களாக அமைந்தன. நேர் வரி அரசிறையில் 35 சதவீதத்திற்குப் பங்களிக்கின்ற பிடித்துவைத்தல் வரியிலிருந்தான அரசிறை பெயரளவு நியதிகளில் ரூ.69.6 பில்லியனுக்கு 10.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையின் மூலம் வரி அரசிறையில் அதன் பங்கு 2013இன் 7.7 சதவீதத்திலிருந்து 2014இல் 6.6 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. இதற்கு உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்கள் மேலும் வீழ்ச்சியடைந்தமையே முக்கிய காரணமாகும். மேலும், 2014இல் பொருளாதார பணிக் கட்டணத்திலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை பொருளாதார பணிக் கட்டணத்தினை செலுத்த வேண்டிய கம்பனிகளின்

எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக ரூ.6.2 பில்லியனுக்கு 6.7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. மொத்த வரி அரசிறையின் பங்கொன்றாக வருமான வரி அரசிறை 2013இல் பதிவு செய்யப்பட்ட 20.4 சதவீதத்திலிருந்து 2014இல் 18.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மேலும், மொத்த அரசிறையின் சதவீதமாக இது 2013இல் பதிவு செய்யப்பட்ட 18.1 சதவீதத்திலிருந்து 2014இல் 16.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

மொத்த வரி அரசிறையில் தனியொரு உயர்ந்த பங்களிப்பாளராக விளங்கும் பெறுமதிசேர் வரியிலிருந்தான சேகரிப்பு 2014இல் அதிகரித்தமைக்கு மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகத்திற்கு பிரயோகிக்கத்தக்க கீழ்மட்டம் காலாண்டொன்றிற்கு ரூ.500 மில்லியனிலிருந்து காலாண்டொன்றிற்கு ரூ.250 மில்லியனுக்கு குறைக்கப்பட்டதன் மூலம் பெறுமதிசேர் வரித்தளம் விரிவடைந்தமையே முக்கிய காரணமாகும். இதன்படி, பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையானது தயாரிப்பு மற்றும் நிதியியல் பணிகளின் அதிகரித்த பங்களிப்பின் முக்கிய விளைவாக முன்னைய ஆண்டின் ரூ.250.8 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.275.4 பில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகப் பார்க்கையில், இது 2013இன் 2.9 சதவீதத்திலிருந்து 2014இல் 2.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட பெறுமதிசேர் வரி அரசிறை 2014இல் மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக 1.4 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்ட வேளையில் பெயரளவு நியதிகளில் இது ரூ.140.1 பில்லியனுக்கு 12.6 சதவீதத்தினால் அதிகரித்தது. மேலும், உந்து ஊர்திகள் மற்றும் சிகரெட்டுக்களின் இறக்குமதி மீது கலால் தீர்வை (கலால் சிறப்பு ஏற்பாட்டு தீர்வை அல்லது கலால் கட்டளைத் தீர்வை) என்ற பெயரில் தனியொரு வரி விதிக்கப்பட்டதன் மூலம் பெறுமதிசேர் வரி (மற்றும் ஏனைய பல வரிகள்) நீக்கப்பட்டமைக்கிடையிலும் இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறை ரூ.135.3 பில்லியனுக்கு 7.1 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த வரி அரசிறைக்குள் பெறுமதிசேர் வரியிலிருந்தான அரசிறையின் பங்கு 2013இல் பதிவு செய்யப்பட்ட 24.9 சதவீதத்திலிருந்து 2014இல் 26.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக கலால் தீர்வையிலிருந்தான அரசிறை 2013இன் 2.9 சதவீதத்திலிருந்து 2014இல் 2.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த போதும் பெயரளவு நியதிகளில் இது 2013இன் ரூ.250.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ஆண்டுக் காலத்தில் ரூ.256.7 பில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் அதிகரித்தது. 2.3 சதவீதத்தினால் குறைவடைந்த சிகரெட் தவிர்ந்த, அனைத்து வகைகள்

**அட்டவணை 6.2**
**அரசிறையின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

| விடயம் | 2013 | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2014 தற்காலிக மானவை | 2015 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | |
| **வரி அரசிறை (அ)** | **1,005,895** | **1,274,600** | **1,050,362** | **1,337,000** |
| வருமான வரிகள் | 205,666 | 283,318 | 198,115 | 310,600 |
| பெ.சே.வ | 250,757 | 303,232 | 275,350 | 296,000 |
| கலால் வரிகள் | 250,700 | 266,333 | 256,691 | 343,435 |
| இறக்குமதித் தீர்வை | 83,123 | 94,556 | 81,108 | 85,000 |
| ஏனைய வரிகள் | 215,649 | 327,161 | 239,099 | 301,965 |
| **வரியல்லா அரசிறை** | **131,552** | **162,893** | **144,844** | **167,700** |
| **மொத்த அரசிறை** | **1,137,447** | **1,437,493** | **1,195,206** | **1,504,700** |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக | | | | |
| **வரி அரசிறை (அ)** | **11.6** | **12.8** | **10.7** | **11.8** |
| வருமான வரிகள் | 2.4 | 2.9 | 2.0 | 2.7 |
| பெ.சே.வ | 2.9 | 3.1 | 2.8 | 2.6 |
| கலால் வரிகள் | 2.9 | 2.7 | 2.6 | 3.0 |
| இறக்குமதி வரிகள் | 1.0 | 1.0 | 0.8 | 0.8 |
| ஏனைய வரிகள் | 2.5 | 3.3 | 2.4 | 2.7 |
| **வரியல்லா அரசிறை** | **1.5** | **1.6** | **1.5** | **1.5** |
| **மொத்த அரசிறை** | **13.1** | **14.5** | **12.2** | **13.3** |

(அ) குறிப்பிட்ட செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரிவிலக்கு அளவு மற்றும் அரச ஊழியர்களால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்ட வரிச்சலுகைகளின் அளவு உள்ளடங்களாக.

மூலம் : நிதி அமைச்சு

மீதான கலால் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2013 உடன் ஒப்பிடுகையில் 2014இல் அதிகரித்தது. கலால் தீர்வைக்கான பாரிய பங்களிப்பாளராக விளங்கும் உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை மேம்பட்டமைக்கு இவ்வாண்டுக் காலப்பகுதியில் உந்து ஊர்திகளின் இறக்குமதிகள் 54 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். மேலும், வெறியக் குடிவகை மற்றும் தேறல் குடிவகை இரண்டின் மீதுமான கலால் தீர்வை வீதங்களின் மேல் நோக்கிய திருத்தம் மற்றும் ஆண்டுக் காலப்பகுதியில் தேறல் குடிவகையின் உற்பத்தி 3.5 சதவீதத்தினால் அதிகரித்தமை என்பனவற்றின் விளைவாக குடிவகையிலிருந்தான கலால் தீர்வை அரசிறை, பெயரளவு நியதிகளில் 4.7 சதவீதத்தினால் அதிகரித்தது. 2014இல் பெற்றோலிய உற்பத்தியின் இறக்குமதிகள் 6.7 சதவீதத்தினால் அதிகரித்தமையானது, பெற்றோலிய உற்பத்திகள் மீதான கலால் தீர்வைகளிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பெருமளவிற்குப் பங்களித்தது. ஆண்டின் பிற்பகுதியில் சிகரெட்டுக்களின் இறக்குமதி மற்றும் தயாரிப்பு இரண்டின் மீதுமான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி அகற்றப்பட்டமையின் மூலம் கலால் தீர்வைகள் மட்டும் உயர்ந்த வீதத்தில் விதிக்கப்பட்டமைக்கிடையிலும் சிகரெட் மீதான கலால் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.58.6 பில்லியனிலிருந்து ரூ.57.2 பில்லியனுக்கு 2.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது சிகரெட் விற்பனை 11.5 சதவீதத்தினால் குறைவடைந்தமையின் விளைவாகும். வரி அரசிறையில் கலால் தீர்வை அரசிறையின் பங்கு 2013இன் 24.9 சதவீதத்திலிருந்து 2014இல் 24.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

**2014இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இறக்குமதித் தீர்வைகள் மற்றும் சிறப்புப் பண்டத் தீர்வை என்பனவற்றிலிருந்தான அரசிறை 2013இல் பதிவு செய்யப்பட்ட 1.5 சதவீதத்திலிருந்து 2014இல் 1.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.** இறக்குமதித் தீர்வைகளிலிருந்தான அரசிறை 2013இல் பதிவு செய்யப்பட்ட ரூ.83.1 பில்லியனிலிருந்து ரூ.81.1 பில்லியனுக்கு 2.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில், சிறப்புப் பண்டத் தீர்வையிலிருந்தான அரசிறை 2013இன் ரூ.46.7 பில்லியனிலிருந்து ரூ.47.9 பில்லியனுக்கு 2.7 சதவீதத்தினால் சிறிதளவிற்கு அதிகரித்தது. நுகர்வுப்பொருட்கள் மற்றும் இடைநிலைப்பொருட்களின் இறக்குமதியில் சாதகமான செயலாற்றம் பதிவு செய்யப்பட்ட போதும் இறக்குமதித் தீர்வையிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடைந்தமைக்கு உந்து ஊர்திகள் மீதான இறக்குமதித் தீர்வைக்கு (மற்றும் ஏனைய பல வரிகள்) பதிலாக கலால் தீர்வை (சிறப்பு ஏற்பாடுகள்) விதிக்கப்பட்டமை மற்றும் இறக்குமதித் தீர்வை உள்ளடங்கலாக மற்றைய அனைத்துப் பிரயோகிக்கத்தக்க வரிகளுக்கு பதிலாக அரிசி, சோளம் மற்றும் தானிய இறுங்கு என்பன மீது சிறப்புப் பண்டத் தீர்வை அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. மேலும், 2014ஆம் ஆண்டுப் பகுதியில் வேறுபட்ட செயற்றிட்டங்களின் கீழ் வழங்கப்பட்ட விலக்கல்கள் மற்றும் சலுகைகள் அத்துடன் பல இறக்குமதி விடயங்கள் மீது வழங்கப்பட்ட பொதுவான தீர்வைத் தளர்த்தல்கள் என்பனவும் இறக்குமதித் தீர்வையிலிருந்தான அரசிறை வீழ்ச்சியடையப் பங்களித்தன. வரி அரசிறையில் இறக்குமதித் தீர்வைகளின் பங்கு 2013இல் பதிவு செய்யப்பட்ட 8.3 சதவீதத்திலிருந்து 7.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, 2014இல் வரி அரசிறையில் சிறப்புப் பண்டத் தீர்வையின் பங்கு 0.5 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது.

**பெயரளவு நியதிகளில் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை 2014இல் 8.9 சதவீதத்தினால் ரூ.44.6 பில்லியனிற்கு அதிகரித்தமைக்கு உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகள் மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும்.** இதன்படி, உள்நாட்டுப் பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்து உருவாக்கப்பட்ட அரசிறை 2014இல் ரூ.28.5 பில்லியனுக்கு 12.9 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து இறக்குமதிகள் செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் பணிகள் மீதான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறை ரூ.16.1 பில்லியனுக்கு 2.5 சதவீதத்தினால் சிறிதளவால் அதிகரித்தது. தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி மற்றும் ஏனைய பல வரிகளுக்குப் பதிலாக உந்து ஊர்திகள் மீதான கலால் தீர்வை, சிகரெட் இறக்குமதிகள் மீதான கலால் தீர்வை மற்றும் அரிசி, சோளம் மற்றும் தானிய இறுங்கு போன்றவற்றின் இறக்குமதி மீதான சிறப்புப் பண்டத் தீர்வை போன்ற தனியொரு வரிகள் விதிக்கப்பட்ட போதும் இது இடம்பெற்றது. இதன்படி, மொத்த வரி அரசிறையில் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரியிலிருந்தான அரசிறையின் பங்கு 2013இல் பதிவு செய்யப்பட்ட 4.1 சதவீதத்திலிருந்து 2014இல் 4.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. இறக்குமதி மையத்தில் மருந்தாக்கல் உற்பத்திகள் மீது தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரியினை விதித்தமை, நிதியியல் பணிகள் மீது வழங்கப்பட்ட விலக்கல்கள் புறக்கீடு செய்யப்பட்டமை மற்றும் சுற்றுலாவிடுதிகள் மற்றும் உணவக துறையில் ஏற்பட்ட முன்னேற்றம் என்பனவும் தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரிகளிலிருந்தான அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு பங்களித்தன.

**2014இல் மற்றைய வரிகளிலிருந்தான அரசிறை கலப்பான செயலாற்றத்தினைக் காட்டியது.** 2013இல் 12.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த துறைமுகம் மற்றும் வானூர்திநிலைய அபிவிருத்தி தீர்வை 2014இல் ரூ.68.6 பில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தது. செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.38.7 பில்லியனுக்கு 7.2 சதவீதத்தினால் அதிகரித்தது. குடிவகையின் இறக்குமதி மீதான பெறுமதிசேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்குப் பதிலாக செஸ் தீர்வை விதிக்கப்பட்டமையும் தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் மீதான செஸ் தீர்வையின் மேல் நோக்கிய திருத்தங்களும் செஸ் தீர்வையிலிருந்தான அரசிறையின் அதிகரிப்பிற்குப் பங்களித்தன. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக செஸ் தீர்வையிலிருந்தான அரசிறை 0.4 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. தொலைத்தொடர்பூட்டல் தீர்வை 20 சதவீதத்திலிருந்து 25 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டமையானது தொடர்பூட்டல் தீர்வையிலிருந்தான அரசிறையின் குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு முக்கியமாக பங்களித்ததுடன் இது 2014இல் 28.3 சதவீதத்தினால் ரூ.31.4 பில்லியனுக்கு அதிகரித்தது.

**மொத்த அரச அரசிறையில் வரியல்லா அரசிறையின் பங்கு முன்னைய ஆண்டின் 11.6 சதவீதத்திலிருந்து 12.1 சதவீதத்திற்கு அதிகரித்து ரூ.144.8 பில்லியனுக்கு 10.1 சதவீதம் கொண்ட வளர்ச்சியடைந்தது.** இவ்வதிகரிப்பிற்கு, அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிலிருந்தான இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களில் ஏற்பட்ட அதிகரிப்பும் வட்டி மற்றும் வாடகையிலிருந்தான வருமானங்களும் முக்கிய காரணங்களாக அமைந்தன. மத்திய வங்கியிலிருந்தான இலாப மாற்றல்கள் 2013இன் ரூ.26.4 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.11.5 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்த போதும் அரசிற்குச் சொந்தமான ஏனைய தொழில்முயற்சிகளின் இலாபம் மற்றும் பங்கிலாபங்களிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டின்

ரூ.35.2 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.46.8 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது. கட்டணமும் விதிப்புக்களும் மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்புக்களிலிருந்தான அரசிறை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 6.0 சதவீதத்தினாலும் 1.5 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

## கொடைகள்

இவ்வாண்டுப் பகுதியில் பெறப்பட்ட மொத்தக் **கொடைகள் 2013இன் ரூ.15.9 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.9.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.** இது 2014ஆம் ஆண்டிற்கான ஆண்டு மதிப்பீடான ரூ.32 பில்லியனைவிட குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவானதாகும். பல்புடைக் கொடையாளர்களிடமிருந்தான கொடைகள் 2013இன் ரூ.6.5 பில்லியனிலிருந்து ரூ.15.4 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும், மொத்தக் கொடைகளில் பல்புடை மூலங்களிலிருந்தான கொடைகளின் பங்கு 2013இன் 41.2 சதவீதத்திலிருந்து 2014இல் 57.7 சதவீதத்திற்கு அதிகரித்தது. இருபுடை மூலங்களிலிருந்தான கொடைகள் முன்னைய ஆண்டின் ரூ.9.3 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.4.0 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

## செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல்

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2013இன் 19.2 சதவீதத்திலிருந்து 2014இல் 18.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, மீண்டெழும் செலவினத்தின் முகாமைத்துவம் மேம்பட்டமையினையும் மூலதனச் செலவினம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டமையையும் பிரதிபலித்தது.** மொத்தச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலில் ஏற்பட்ட குறைப்பு மீண்டெழும் செலவினம் மொ.உ.உற்பத்தியின் 13.5 சதவீதத்திற்கு 0.4 சதவீதப் புள்ளிகளினால் குறைவடைந்தமையினதும் மூலதன செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியில் 4.8 சதவீதத்திற்கு 0.6 சதவீதப் புள்ளிகளினால் குறைவடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். எனினும், பெயரளவு நியதிகளில் மொத்தச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் 2013இன் ரூ.1,669.4 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,795.9 பில்லியனுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்த போதும், இது இவ்வாண்டிற்காக எதிர்பார்க்கப்பட்ட ஆரம்ப வரவு செலவுத்திட்ட இலக்கான ரூ.1,985.6 பில்லியனைவிட குறைவானதாகும். 2014இற்கான அரச முதலீடுகள் மொ.உ.உற்பத்தியில் 5.0 சதவீதத்தினைப் பதிவு செய்ததுடன் இது அரச அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு மத்தியிலும் மூலதனச் செலவினத்தை ஒழுங்குமுறைப்படுத்தியதன் விளைவாக மொ.உ.உற்பத்தியில் 6.7 சதவீதமான ஆண்டு மதிப்பீட்டினை விட குறிப்பிடத்தக்களவிற்குக் குறைவாக இருந்தது.

**அட்டவணை 6.3 செலவினம் மற்றும் மீள்கொடுப்பனவுகளை கழித்த கடன்வழங்களின் பொருளாதாரப் பகுப்பாய்வு**

| விடயம் | 2013 | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2014 தற்காலிக மானவை | 2015 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள |
|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **1,205,180** | **1,328,283** | **1,322,898** | **1,552,035** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 512,624 | 591,697 | 603,634 | 756,351 |
| இதில் சம்பளங்கள் மற்றும் கூலிகள் | 393,228 | 410,614 | 440,982 | 570,000 |
| வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 444,007 | 441,035 | 436,395 | 425,030 |
| வெளிநாட்டு | 100,985 | 76,000 | 108,461 | 76,000 |
| உள்நாட்டு | 343,022 | 365,035 | 327,934 | 349,030 |
| நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் | 248,549 | 295,551 | 282,868 | 370,654 |
| இதில் குடும்ப அலகுகளுக்கும் ஏனைய துறைகளுக்கும் | 195,288 | 233,526 | 216,860 | 310,805 |
| சமுர்த்தி | 15,256 | 15,000 | 15,042 | 41,000 |
| ஓய்வூதியங்கள் | 122,813 | 136,210 | 126,136 | 159,890 |
| வளமாக்கி மானியம் | 19,706 | 38,000 | 31,802 | 35,000 |
| ஏனையவை | 37,512 | 44,316 | 43,880 | 74,915 |
| **மூலதனச் செலவினம்** | **454,303** | **641,123** | **459,855** | **472,928** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 252,535 | 406,697 | 252,303 | 226,571 |
| மூலதன மாற்றல்கள் | 201,768 | 234,426 | 207,551 | 246,357 |
| **மீள் கொடுப்பனவுகளை கழித்த கடன் வழங்கல்** | **9,913** | **16,213** | **13,112** | **9,113** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன் வழங்கலும்** | **1,669,396** | **1,985,619** | **1,795,865** | **2,034,076** |
| மொ.உ.உ. இன் சதவீதமாக | | | | |
| **மீண்டெழும் செலவினம்** | **13.9** | **13.4** | **13.5** | **13.7** |
| பொருட்கள் பணிகள் மீதான செலவு | 5.9 | 6.0 | 6.2 | 6.7 |
| இதில் சம்பளங்களும் கூலிகளும் | 4.5 | 4.1 | 4.5 | 5.0 |
| வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 5.1 | 4.4 | 4.5 | 3.8 |
| வெளிநாட்டு | 1.2 | 0.8 | 1.1 | 0.7 |
| உள்நாட்டு | 4.0 | 3.7 | 3.4 | 3.1 |
| நடைமுறை மாற்றல்களும் மானியங்களும் | 2.9 | 3.0 | 2.9 | 3.3 |
| இதில் குடும்ப அலகுகளும் ஏனைய துறைகளும் | 2.3 | 2.4 | 2.2 | 2.7 |
| சமுர்த்தி | 0.2 | 0.2 | 0.2 | 0.4 |
| ஓய்வூதியங்கள் | 1.4 | 1.4 | 1.3 | 1.4 |
| வளமாக்கி மானியம் | 0.2 | 0.4 | 0.3 | 0.3 |
| ஏனையவை | 0.4 | 0.4 | 0.4 | 0.7 |
| **மூலதனச் செலவினம்** | **5.2** | **6.5** | **4.7** | **4.2** |
| உண்மைச் சொத்துக்களின் கையேற்பு | 2.9 | 4.1 | 2.6 | 2.0 |
| மூலதன மாற்றல்கள் | 2.3 | 2.4 | 2.1 | 2.2 |
| **மீள் கொடுப்பனவுகளை கழித்த கடன் வழங்கல்** | **0.1** | **0.2** | **0.1** | **0.1** |
| **மொத்த செலவினமும் தேறிய கடன்வழங்கலும்** | **19.2** | **20.0** | **18.3** | **18.0** |

(அ) 29.11.2013 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல. 230/2013 இற்கு ஏற்றவாறு நடைமுறையிலுள்ள உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட வட்டிகள் ரூ. 18.9 பில்லியன் மற்றும் ரூ. 7.2 பில்லியன் முறையே 2013 மற்றும் 2014இல் (தற்காலிகமானது) மூலதனமயப்படுத்தப்பட்டது.

மூலம் : நிதி அமைச்சு

வரவு செலவுத்திட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட **இலக்கிற்குள் மீண்டெழும் செலவினத்தினைப் பேணுவதென்ற அரசாங்கத்தின் கடப்பாட்டின் காரணமாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மீண்டெழும் செலவினம் 2013இல் பதிவு செய்யப்பட்ட 13.9 சதவீதத்திலிருந்து 13.5 சதவீதத்திற்கு தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.** பெயரளவு நியதிகளில், மீண்டெழும் செலவினம் வரவு செலவுத்திட்ட இலக்குகளுக்கு கீழே பேணப்பட்ட பொழுதும் இது 2013இன் ரூ.1,205.2 பில்லியனிலிருந்து ரூ.1,322.9 பில்லியனுக்கு 9.8 சதவீதத்தினால் அதிகரித்தது. ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் மீதான செலவினத்தின் கடுமையான கட்டுப்பாடுகள் மற்றும் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறைப்பு என்பன மீண்டெழும் செலவினத்தினை வரவு செலவுத்திட்ட இலக்குகளுக்குள் பேணப் பங்களித்தன. எனினும், இவ்வாண்டுப்

பகுதியில் அரசாங்கம் அரச ஊழியர்களின் சம்பளங்களையும் கூலிகளையும் அதிகரித்தமையின் காரணமாக சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்வாக இருந்தது.

**உள்நாட்டுச் சந்தையில் வட்டி வீதங்கள் வீழ்ச்சியடைந்ததன் விளைவாக 2014இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டின் 5.1 சதவீதத்திலிருந்து 4.5 சதவீதத்திற்கு கணிசமாக வீழ்ச்சியடைந்தன.** வட்டிச் செலவினம் பெயரளவு நியதிகளில் 2013இன் ரூ.444 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.436.4 பில்லியனுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்து, மொத்த மீண்டெழும் செலவினத்தில் 33.0 சதவீதத்திற்குப் பங்களித்தது. உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் பெயரளவு நியதிகளில் 2013இன் ரூ.343 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.327.9 பில்லியனுக்கு 4.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு வெளிநின்ற உள்நாட்டுப் படுகடன் 2014இறுதியில் ரூ.4,277.8 பில்லியனுக்கு 11.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கிடையிலும் 2014இல் உள்நாட்டுச் சந்தையில் நிலவிய தாழ்ந்த வட்டி வீதங்களே காரணமாகும். திறைசேரி முறிகள் மீதான சராசரி வட்டி வீதங்கள் 2013இன் 10.4 சதவீதத்திலிருந்து 2014இல் 7.3 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததன் விளைவாக திறைசேரி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2013இன் ரூ.254.1 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.207.7 பில்லியனுக்கு 18.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தன. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2013இன் ரூ.69.7 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.78.8 பில்லியனுக்கு 13.1 சதவீதத்தினால் மிதமாக உயர்வடைந்தன. மேலும், ரூபாக் கடன்கள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2014இல் முறையே ரூ.5.9 பில்லியனாகவும் ரூ.18.8 பில்லியனாகவும் விளங்கின. எனினும், மொத்த வட்டிக் கொடுப்பனவில் உள்நாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவின் பங்கு முன்னைய ஆண்டின் 77.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 75.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 2013இன் ரூ.101 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.108.5 பில்லியனுக்கு 7.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமைக்கு வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் ஏற்பட்ட அதிகரிப்பும் சலுகை ரீதியான கடன்கள் சலுகையற்ற கடன்களாக படிப்படியாக மாற்றமடைந்து வருகின்றமையும் பெருமளவு காரணங்களாக விளங்கின. வெளிநாட்டுப் படுகடன் மீதான சராசரி வட்டி வீதம் முன்னைய ஆண்டின் 3.4 சதவீதத்திலிருந்து 2014இல் 3.5 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப்படி உட்பட படிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் முக்கிய காரணமாக சம்பளங்கள் மற்றும் கூலிகள் மீதான செலவினம் 2013இன் ரூ.393.2 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.441 பில்லியனுக்கு 12.1 சதவீதத்தினால் அதிகரித்தது.** வாழ்க்கைச் செலவுப்படி ரூ.1,200 இனால் மாதமொன்றிற்கு ரூ.7,800 இற்கு அதிகரித்தமை, அரச பணிகளிலுள்ள தகுதியான அலுவலர்களுக்கான ஆராய்ச்சிப்படி அவர்களது ஆரம்ப சம்பளத்தின் 35 சதவீதத்தினால் அதிகரித்தமை மற்றும் அனைத்து அரச ஊழியர்களுக்கும் இடைக்காலப் படியாக மாதமொன்றிற்கு ரூ.3,000 வழங்கப்பட்டமை என்பன 2014இல் சம்பளங்கள் மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குப் பெருமளவிற்குப் பங்களித்தன. மேலும், அமய மற்றும் ஒப்பந்த ஊழியர்களை நிரந்தரப் பணிக்குள் உள்ளீர்த்தமையும் சம்பளங்கள் மற்றும் கூலிகளிலான அதிகரிப்பிற்கு பங்களித்தது. எனினும், மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக சம்பளங்களும் கூலிகளும் முன்னைய ஆண்டினைப் போன்றே 2014இலும் மாற்றமின்றி 4.5 சதவீதத்தில் காணப்பட்டன. பாதுகாப்பு ஆளணியினர் உட்பட மத்திய அரச ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட சம்பளங்களும் கூலிகளும் ரூ.319.2 பில்லியனுக்கு 10.8 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில் மாகாணசபை ஊழியர்களுக்கான சம்பளங்கள் மற்றும் கூலிகளுக்கான மத்திய அரசாங்கத்தின் பங்களிப்பு 2014இல் ரூ.121.8 பில்லியனுக்கு 16 சதவீதத்தினால் அதிகரித்தது. மொத்த மீண்டெழும் செலவினத்தில் சம்பளங்கள் மற்றும் கூலிகளின் பங்கு 2013இல் பதிவு செய்யப்பட்ட 32.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 33.3 சதவீதத்திற்கு வகைகூறியது. இது ஆண்டுக்காலத்தில் இரண்டாவது பெரிய மீண்டெழும் செலவின விடயமாகவும் காணப்பட்டது.

**மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான மீண்டெழும் செலவினம் 2013இன் 1.4 சதவீதத்திலிருந்து 2014இல் 1.7 சதவீதத்திற்கு அதிகரித்தமைக்கு பாதுகாப்பு மீதான செலவினம் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.** பெயரளவு நியதிகளில் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் முன்னைய ஆண்டில் பதிவு

வரைபடம் 6.3 அரச நடைமுறைச் செலவினத்தின் உள்ளடக்கம் - 2014



செய்யப்பட்ட ரூ.119.4 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.162.7 பில்லியனுக்கு 36.2 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. பாதுகாப்பு உட்பட ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீது மத்திய அரசாங்கத்தினால் உறப்பட்ட செலவினம் 2013இன் ரூ.115.6 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.158.2 பில்லியனுக்கு 36.9 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தது. இது, இவ்வாண்டுப் பகுதியில் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான மொத்தச் செலவினத்தில் 97.3 சதவீதத்திற்கு வகைகூறியது. எனினும், செலவினங்களை நெருக்கமாகக் கண்காணித்ததன் காரணமாக ஏனைய பொருட்கள் மற்றும் பணிகள் மீதான செலவினம் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கு மிகவும் கீழேயே காணப்பட்டது.

**அரச கூட்டுத்தாபனங்களுக்கும் அரச நிறுவனங்களுக்குமான நடைமுறை மாற்றல் உதவுதொகைகளை சிக்கனப்படுத்துவதற்காக அரசினால் எடுக்கப்பட்ட முயற்சிகளின் காரணமாக மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைளும் 2014இல் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது.** எனினும், பெயரளவு நியதிகளில், நடைமுறை மாற்றல்களும் உதவுதொகைகளும் 2013இன் ரூ.248.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.282.9 பில்லியனுக்கு 13.8 சதவீதத்தினால் அதிகரித்தன. வீட்டலகுகள் மற்றும் ஏனைய துறைகளுக்கான நடைமுறை மாற்றல்கள் மொத்த நடைமுறை மாற்றல்களில் 76.7 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் 2014இல் அரச நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் முறையே 16.5 சதவீதத்திற்கும் 6.9 சதவீதத்திற்கும் வகைகூறின.

**ஓய்வூதியக் கொடுப்பனவுகள் உட்பட குடும்ப அலகுகளுக்கான நடைமுறை மாற்றல்கள் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 2013இன் 2.3 சதவீதத்திலிருந்து 2014இல் 2.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்த போதும், அதிகரித்த வளமாக்கி உதவுதொகைகளின் காரணமாக பெயரளவு நியதிகளில் அதிகரிப்பொன்று பதிவுசெய்யப்பட்டது.** குடும்ப அலகுகளுக்கான நடைமுறை மாற்றல்கள் பெயரளவு நியதிகளில் 2013இன் ரூ.195.3 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.216.9 பில்லியனுக்கு 11.0 சதவீதத்தினால் அதிகரித்தது. ஓய்வூதியக்காரர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் 2014இல் 7,376 ஓய்வூதியக்காரர்கள் புதிதாக சேர்ந்து கொண்டமை என்பன ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 2014இல் 2.7 சதவீதத்தினால் ரூ.126.1 பில்லியனுக்கு அதிகரிக்க வழிவகுத்தன. வளமாக்கி உதவுதொகை 2013இல் ரூ.19.7 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.31.8 பில்லியனுக்கு 61.4 சதவீதத்தினால் கணிசமாக அதிகரித்தமைக்கு வளமாக்கி கம்பனிகளுக்கு 2013இன் இறுதிக் காலாண்டில் செலுத்தவேண்டிய நிலுவைகளின் மீள்கொடுப்பனவே முக்கிய காரணமாகும்.

மேலும், உடல் ஊனமுற்ற படைவீரர்களுக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களின் மீதான செலவினமும் முன்னைய ஆண்டின் ரூ.16.1 பில்லியனிலிருந்து ரூ.18.2 பில்லியனுக்கு 13 சதவீதத்தினால் அதிகரித்தது. சமுர்த்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 2013இன் ரூ.15.3 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.15 பில்லியனுக்கு 1.4 சதவீதத்தினால் சிறிளதவு வீழ்ச்சியடைந்தது. பாடசாலைப் பாடப்புத்தகங்கள், சீருடைகள், பருவகாலச் சீட்டுக்கள் மற்றும் இலவச சமய பாடசாலை நூல்களை வழங்குதல் போன்ற பாடசாலை மாணவர்களை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சித்திட்டங்கள் 2014ஆம் ஆண்டுப் பகுதியில் அரசாங்கத்தினால் குடும்ப அலகுகளுக்கு வழங்கப்பட்ட ஏனைய முக்கிய உதவுதொகைத் திட்டங்களிடையே காணப்பட்டன.

**கல்வி மற்றும் நலத்துறைக்கான அதிகரித்த மாற்றல்கள் மற்றும் போக்குவரத்து துறையிலுள்ள நிறுவனங்களின் தொழிற்பாட்டு இழப்புக்களை உள்ளடக்குவதற்கான மாற்றல்களுடன் அரச நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் இவ்வாண்டுப்பகுதியில் அதிகரித்தன.** அரச நிறுவனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் ரூ.46.6 பில்லியனுக்கு 18.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவு அதிகரித்த அதேவேளை, அரச கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் ரூ.19.4 பில்லியனுக்கு 40.3 சதவீதத்தினால் அதிகரித்தன. அரச நிறுவனங்களுக்கான நடைமுறைமாற்றல்கள் அதிகரித்தமைக்கு கல்வி மற்றும் நலத் துறைகளிலுள்ள நிறுவனங்களுக்கான மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாக அமைந்த வேளையில், அரச கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறைமாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இலங்கைப் புகைவண்டித் திணைக்களம் மற்றும் அஞ்சல் திணைக்களம் என்பனவற்றின் தொழிற்பாட்டு இழப்புக்களை ஈடுசெய்வதற்கான மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக அமைந்தது.

வரைபடம் 6.4 தொழிற்பாடுகளின்படி மொத்தச் செலவினம் - 2014



**மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் மற்றும் அரச முதலீடுகள் என்பன 2014இல் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திலும் பார்க்க கீழேயே காணப்பட்டன.** மூலதனச் செலவினமும் தேறிய கடன் வழங்கலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 5.4 சதவீதத்திலிருந்து 2014இல் 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும், பெயரளவு நியதிகளில் இது, முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ரூ.464.2 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.473.0 பில்லியனுக்கு 1.9 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேபோன்று, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச முதலீடு 2013இன் 5.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 5.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து ஆண்டு இலக்கான 6.7சதவீதத்திற்கு கணிசமானளவு குறைவாகக் காணப்பட்டது. பெயரளவு நியதிகளில், அரச முதலீடு ரூ.486.6 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் இது 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ரூ.668.5 பில்லியனை விடக் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவானதாகும். உண்மைச் சொத்துக்களின் கையேற்பு (மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு மற்றும் நிலையான சொத்துக்களின் கட்டுமானம் மற்றும் அபிவிருத்தி) தொடர்பில் அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் உறப்பட்ட செலவினம் 2014இல் ரூ.252.3 பில்லியனுக்கு 0.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. அதேவேளை, மூலதன மாற்றல்கள் 2.9 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு அரச நிறுவனங்கள் (2.6 சதவீதத்தினால்), மாகாண சபைகள் (6.2 சதவீதத்தினால்) மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் (4.2 சதவீதத்தினால்) என்பனவற்றிற்கான மூலதன மாற்றல்களில் ஏற்பட்ட அதிகரிப்பே காரணமாகும். கடன் வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் முன்னைய ஆண்டின் ரூ.26.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.26.8 பில்லியனாக விளங்கின.

**பொருளாதாரப் பணிகளிலான அரசின் முதலீடு ரூ.330.1 பில்லியனாக அமைந்து 2014இன் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் முக்கிய கூறாகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் இவ்வாண்டுப் பகுதியில் மொத்த அரச முதலீட்டில் 67.8 சதவீதத்திற்கு வகைகூறியது.** முதலீடுகளின் குறிப்பிடத்தக்களவு தொகை வீதிகள், துறைமுகங்கள், வலு மற்றும் சக்தி, புகைவண்டி, நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசன செயற்றிட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது. இதன்படி, தென்பகுதி விரைவுப்பாதை கட்டம் II விரிவாக்கச் செயற்றிட்டம் மற்றும் வெளிச்சுற்றுவட்ட நெடுஞ்சாலை கட்டம் I என்பன 2014இல் நிறைவு செய்யப்பட்டன. புகைவண்டித் துறையினை மேம்படுத்துவதற்காக முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன் ஓமந்தையிலிருந்து யாழ்ப்பாணம் வரையான வடபகுதி புகைவண்டிப் பாதையின் மீள்கட்டுமான செயற்றிட்டம் 2014இல் நிறைவு செய்யப்பட்டது.

அட்டவணை 6.4 செலவினத்தின் தொழிற்பாட்டுப் பகுப்பாய்வு

| விடயம் | 2012 | 2013 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 2013 தற்காலிக மானவை | 2014 ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடுகள |
|---|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | | |
| **நடைமுறைச் செலவினம்** | **1,205,180** | **1,328,283** | **1,322,898** | **1,552,035** |
| அரச பொதுப் பணிகள் | 270,554 | 313,946 | 334,354 | 451,453 |
| பொது நிருவாகம் | 54,303 | 73,036 | 73,282 | 81,974 |
| பாதுகாப்பு | 170,150 | 183,027 | 195,401 | 300,352 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 46,101 | 57,883 | 65,671 | 69,127 |
| சமூகப் பணிகள் | 399,666 | 445,973 | 446,440 | 552,952 |
| கல்வி | 119,819 | 127,004 | 139,787 | 166,922 |
| நலம் | 99,609 | 120,612 | 116,151 | 137,726 |
| நலன்புரி | 159,787 | 173,942 | 165,467 | 224,848 |
| சமூகப் பணிகள் | 20,451 | 24,414 | 25,036 | 23,457 |
| பொருளாதாரப் பணிகள் | 82,146 | 115,304 | 105,030 | 99,758 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 29,899 | 58,769 | 46,782 | 61,029 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 4,001 | 409 | 394 | 716 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 36,810 | 40,153 | 41,129 | 21,799 |
| ஏனையவை | 11,435 | 15,973 | 16,726 | 16,215 |
| ஏனையவை | 452,814 | 453,060 | 437,073 | 447,872 |
| இதில் வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 444,007 | 441,035 | 436,395 | 425,030 |
| **மூலதனச் செலவினம் மற்றும் கடன்வழங்கல்** | **481,204** | **668,465** | **486,610** | **492,341** |
| அரச பொதுப் பணிகள் | 32,804 | 74,386 | 43,620 | 53,504 |
| பொது நிருவாகம் | 31,631 | 67,701 | 40,282 | 47,833 |
| பொதுமக்கள் ஒழுங்கு, பாதுகாப்பு | 1,173 | 6,685 | 3,338 | 5,671 |
| சமூகப் பணிகள் | 77,643 | 121,335 | 112,338 | 133,891 |
| கல்வி | 31,982 | 44,870 | 50,363 | 45,807 |
| நலம் | 19,920 | 41,523 | 22,252 | 41,357 |
| வீடமைப்பு | 8,014 | 9,487 | 20,569 | 29,828 |
| சமூகப் பணிகள் | 17,727 | 25,455 | 19,154 | 16,898 |
| பொருளாதாரப் பணிகள் | 369,377 | 472,223 | 330,136 | 304,400 |
| வேளாண்மை மற்றும் நீர்ப்பாசனம் | 36,721 | 80,532 | 57,099 | 66,305 |
| வலு மற்றும் நீர் வழங்கல் | 87,517 | 58,967 | 51,314 | 22,607 |
| போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் | 210,398 | 259,587 | 177,471 | 201,047 |
| ஏனையவை | 34,741 | 73,137 | 44,252 | 14,441 |
| ஏனையவை | 1,379 | 521 | 516 | 547 |
| **மொத்தச் செலவினமும் கடன் வழங்கலும்** | **1,686,384** | **1,996,748** | **1,809,508** | **2,044,376** |
| மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக | | | | |
| அரச பொதுப்பணிகள் | 3.5 | 3.9 | 3.9 | 4.5 |
| சமூகப் பணிகள் | 5.5 | 5.7 | 5.7 | 6.1 |
| பொருளாதாரப் பணிகள் | 5.2 | 5.9 | 4.4 | 3.6 |
| ஏனையவை | 5.2 | 4.6 | 4.5 | 4.0 |
| இதில் வட்டிக் கொடுப்பனவுகள் (அ) | 5.1 | 4.4 | 4.5 | 3.8 |
| **மொத்தச் செலவினமும் கடன் வழங்கலும்** | **19.4** | **20.1** | **18.6** | **18.1** |

(அ) 29.11.2013 திகதியிடப்பட்ட அரச கணக்கு சுற்றறிக்கை இல. 230/2013 இற்கு ஏற்றவாறு நடைமுறையிலுள்ள உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட வட்டிகள் ரூ. 18.9 பில்லியன் மற்றும் ரூ. 7.2 பில்லியன் முறையே 2013 மற்றும் 2014இல் (தற்காலிகமானது) மூலதனமயப்படுத்தப்பட்டது.

மூலம் : நிதி அமைச்சு

மேலும், முதலீடுகள், வலுச் செயற்றிட்டங்கள், துறைமுகங்கள் மற்றும் வானூர்திநிலையத்தின் அபிவிருத்தியின் மீதும் அதேபோன்று நீர்வழங்கல் மற்றும் நீர்ப்பாசனத் துறைகளிலும் 2014இல் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

**சமூகப் பணிகளிலான அரச முதலீடுகள் 2014இல் 44.7 சதவீதத்தினால் ரூ.112.3 பில்லியனுக்கு அதிகரித்ததுடன் இதில் ரூ.50.4 பில்லியன் கல்விக்கு செலவிடப்பட்ட வேளையில் ரூ.22.2 பில்லியன் நலப் பணிகளுக்காகப் பயன்படுத்தப்பட்டது.** கல்வித் துறையிலான அரச முதலீடுகள் பள்ளிக்கூடங்களின் மூலதனச் சொத்துக்களை மேம்படுத்துவதற்கும் தொழில் மற்றும் தொழில்நுட்பக் கல்வியை மேம்படுத்துவதற்கும் பல்கலைக்கழக உட்கட்டமைப்பினை உயர்த்துவதற்கும்

முக்கியமாகப் பயன்படுத்தப்பட்டது. அதேவேளை, நலத் துறை மீதான அரச முதலீடு முக்கியமாக வைத்தியசாலைகளின் கட்டுமானம் மற்றும் மேம்பாடுகள், அதேபோன்று பல்புடை கொடையாளர்களின் உதவியுடனான ஆய்வுகூட சாதனங்கள் மற்றும் கருவிகளின் வழங்கல் மற்றும் தொற்றக்கூடிய மற்றும் தொற்றாத நோய்களைக் கட்டுப்படுத்துதல் என்பனவற்றின் மீது கவனத்தினைச் செலுத்தியிருந்தது.

**பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கும் நோக்குடன் அரசாங்கம் பல பிராந்திய மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டங்களில் தொடர்ந்தும் ஈடுபட்டது.** இதன்படி, சுயமாகத் தங்கியிருக்கும் குடும்ப அலகுகளின் பொருளாதாரத்தினை ஊக்குவிப்பதற்கான திவிநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மீதான செலவினம் 2014இல் ரூ.3.3 பில்லியனாக விளங்கியது. மேலும், பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதையும் கிராமியத் துறையின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதையும் நோக்காகக் கொண்ட கமநெகும நிகழ்ச்சித்திட்டம் மற்றும் மாகாண உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் மீது உறப்பட்ட செலவினம் ரூ.37.3 பில்லியனாக இருந்தது.

## முக்கிய இறை நிலுவைகள்

**2014இல் பல இறைக் குறிகாட்டிகள் ஆண்டு இலக்குகளிலிருந்தும் பிறழ்வுகளைப் பதிவு செய்தமைக்கு அரச அரசிறையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சியே முக்கிய காரணமாகும்.** 2014இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக திரண்ட இறைப் பற்றாக்குறை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.9 சதவீதத்துடனும் 2014ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட ஆண்டு இலக்கான 5.2 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் 6.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. அரசின் குறைச் சேமிப்புக்களை பிரதிபலிக்கின்ற நடைமுறைக்கணக்கு பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 1.3 சதவீதத்திற்கு அதிகரித்ததுடன் இது 2014 இற்கான ஆரம்ப வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளிலுள்ள மொ.உ.உற்பத்தியின் 1.1 சதவீதம் கொண்ட இலக்கிடப்பட்ட மிகையிலிருந்து குறிப்பிடத்தக்களவிற்கு பிறழ்ந்து காணப்பட்டது. இப்போக்கானது, பொருளாதாரத்தின் நடுத்தர கால வளர்ச்சிக் குறிக்கோள்களைப் பூர்த்தி செய்வதற்காக வலுப்படுத்தப்பட வேண்டிய அரச முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஆதரவளிப்பதன் பொருட்டு நடைமுறைக் கணக்கில் மிகையை (அரச சேமிப்புக்கள்) உருவாக்குவதற்கென அரச அரசிறையை அதிகரிப்பதினதும் மீண்டெழும் செலவினத்தை மேலும் சிக்கனப்படுத்துவதினதும் தேவையை எடுத்துக்காட்டின. அதேவேளை, திரண்ட பற்றாக்குறையிலிருந்து வட்டிக் கொடுப்பனவினை நீக்கியதும் அரசாங்கத்தின் தற்றுணிபான இறைக் கொள்கையினைப் பிரதிபலிப்பதுமான ஆரம்ப பற்றாக்குறை முன்னைய ஆண்டின் மொ.உ.உற்பத்தியின் 0.8 சதவீதத்திலிருந்து 2014இல் மொ.உ.உற்பத்தியின் 1.6 சதவீதத்திற்கு மோசமடைந்தது.

## வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடல்

**2014இல் ரூ.591.2 பில்லியன் கொண்ட பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு அரசாங்கம் உள்நாட்டு மூலங்களிலேயே பெருமளவிற்குத் தங்கியிருந்தது.** 2014இல் தேறிய உள்நாட்டு நிதியிடல் ஆரம்ப மதிப்பீடான ரூ.229.3 பில்லியனுடனும் முன்னைய ஆண்டின் ரூ.392.4 பில்லியனுடனும் ஒப்பிடுகையில் ரூ.378.7 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, தேறிய வெளிநாட்டு நிதியிடல் ரூ.212.5 பில்லியனாக விளங்கி ஆரம்ப மதிப்பீடான ரூ.286.8 பில்லியனை விட குறைவாகக் காணப்பட்டது. இதன்படி, மொத்த நிதியிடல் தேவைப்பாட்டில் உள்நாட்டு நிதியிடல் 2013இன் 76.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 64.1 சதவீதத்திற்குப் பங்களித்த வேளையில் வெளிநாட்டு நிதியிடல் 2013இன் 24.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014இல் 35.9 சதவீதத்திற்குப் பங்களித்தது.

**வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கான உள்நாட்டுக் கடன்பாடுகள் விரிவாக்கமல்லா மூலங்களிலிருந்து முக்கியமாக கிடைத்த வேளையில் இவ்வாண்டுப் பகுதியில் உள்நாட்டு வங்கித்தொழில் துறையின் மீது தங்கியிருந்த தன்மை வீழ்ச்சியடைந்தது.** இதற்கமைய, வங்கியல்லாத் துறையிலிருந்தான கடன்பாடுகள் ரூ.251.8 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்து, 2013இன் ரூ.95.4 பில்லியனிலிருந்து தேறிய உள்நாட்டு நிதியிடலில் 66.5 சதவீதமாக விளங்கியது. 2014இல் வங்கித்தொழில் துறையிலிருந்தான கடன்பாடுகள் ரூ.126.9 பில்லியனாக விளங்கி, 2013இல் பதிவு செய்யப்பட்ட ரூ.297.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் மொத்தத் தேறிய உள்நாட்டுக் கடன்பாடுகளில் 33.5 சதவீதத்தினைப் பிரசன்னப்படுத்தின. மத்திய வங்கியிலிருந்தான நிதியிடல், 2013இன் ரூ.164.8 பில்லியன் தேறிய மீள்கொடுப்பனவிலிருந்து

வரைபடம் 6.5 பற்றாக்குறை நிதியிடல் (மொ.உ.உ.இன் சதவீதமாக)



2014இல் ரூ.35.7 பில்லியனுக்கு அதிகரித்த போதும் வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியிடல் இவ்வாண்டுப் பகுதியில் 2013 இறுதியின் ரூ.461.8 பில்லியனிலிருந்து ரூ.91.3 பில்லியனுக்குக் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தமை வங்கித்தொழில் துறையிலிருந்தான நிதியிடல் குறைவடைய உதவியது. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் கொள்வனவுகள் மற்றும் மத்திய வங்கியிலிருந்து அரசிற்குக் கிடைத்த தற்காலிக முற்பணங்கள் என்பன 2014இல் மத்திய வங்கியிலிருந்தான கடன்பாடுகளின் தேறிய அதிகரிப்பிற்குப் பங்களித்தன. முதிர்ச்சியடைகின்ற திறைசேரி உண்டியல்கள் பெரும்பாலானவை திறைசேரி முறிகளுக்கு மாற்றப்பட்டமையின் காரணமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான கடன்பாடுகள் முக்கியமாக திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளினூடாகவே கிடைத்தன. எனினும், வங்கித்தொழில் துறையிலிருந்தான தேறிய கடன்பாடுகள் 2014 இற்கான வரவு செலவுத்திட்டத்தின் ஆண்டு மதிப்பீடான ரூ.100 பில்லியனுக்கும் உயர்வாகவே விளங்கின.

**2014இல் அரசாங்கம் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையினை நிதியிடுவதற்கு நீண்ட கால சந்தைப்படுத்தத்தக்க படுகடன் சாதனங்களின் மீது அதிகளவில் தங்கியிருந்தது.** இதன்படி, சந்தைப்படுத்தத்தக்க சாதனங்களினூடாக திரட்டப்பட்ட ரூ.416.2 பில்லியன் பெறுமதியான மொத்தத் தேறிய கடன்பாடுகளில் ரூ.390.1 பில்லியன் திறைசேரி முறிகள் மற்றும் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்து திரட்டப்பட்டதுடன் மீதி ரூ.26.1 பில்லியன் கொண்ட தொகை திறைசேரி உண்டியல்களினூடாகத் திரட்டப்பட்டது. எனினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், சந்தைப்படுத்தத்தக்க சாதனங்களினூடான கடன்பாடுகள் 6.1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த அதேவேளை, சந்தைப்படுத்த முடியாத சாதனங்களினூடான கடன்பாடுகள் 2014இல் 37.5 பில்லியன் கொண்ட தேறிய மீள்கொடுப்பனவினைப் பதிவு செய்தன.

**வரைபடம் 6.6 வங்கி நிதியிடலின் மூலங்கள்**




**அட்டவணை 6.5 உள்நாட்டு நிதியிடல் மூலங்கள்**

ரூபா பில்லியன்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **கருவிகளின் படி** | **231.2** | **200.4** | **392.4** | **378.7** |
| திறைசேரி முறிகள் (அ) | 168.4 | 154.5 | 252.1 | 369.1 |
| திறைசேரி உண்டியல்கள் (ஆ) | 79.6 | 16.8 | 53.5 | 26.1 |
| ரூபாக் கடன்கள் | -25.7 | -3.6 | -2.9 | - |
| இலங்கை அபிவிருத்தி முறிகள் | 5.3 | 18.4 | 140.3 | 21.0 |
| மத்திய வங்கி தற்காலிக முற்பணங்கள் | 16.9 | 16.5 | -2.1 | 34.7 |
| ஏனையவை | -13.2 | -2.2 | -48.5 | -72.2 |
| **மூலங்களின் படி** | **231.2** | **200.4** | **392.4** | **378.7** |
| வங்கி | 191.9 | 131.5 | 297.0 | 126.9 |
| வங்கியல்லா | 39.4 | 68.9 | 95.4 | 251.8 |

(அ) வெளிநாட்டு முதலீட்டாளர்கள், புலம்பெயர்ந்த இலங்கையர், புலம்பெயர்ந்த வேலையாட்கள் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் மற்றும் அரசிற்கு சொந்தமான வியாபார நிறுவனங்களை மீளமைப்பதற்காக 2012 மற்றும் 2014 இல் திரட்டப்பட்ட நிதிகள் நீங்கலாக.

(ஆ) வெளிநாட்டு முதலீட்டாளர்கள், புலம்பெயர்ந்த இலங்கையர் மற்றும் புலம்பெயர்ந்த வேலையாட்களுக்கு வழங்கப்பட்ட ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகள் நீங்கலாக.

மூலங்கள் : நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுக் கடன்பாடுகள் 2014இல் வீழ்ச்சியடைந்தன.** 2 இலிருந்து 5 ஆண்டுகள் வரையிலான முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் ரூ.95.5 பில்லியனாக (ஐ.அ.டொலர் 731.5 மில்லியன்) விளங்கிய வேளையில் மீள்கொடுப்பனவுகள் ரூ.74.5 பில்லியனாக (ஐ.அ.டொலர் 571 மில்லியன்) விளங்கின. அதேவேளை, இவ்வாண்டுப் பகுதியில், அரசாங்கம் வர்த்தக வங்கிகளின் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளில் காணப்பட்ட அதன் பொறுப்புக்களில் ரூ.612.6 மில்லியனை மீளச்செலுத்தியது. இதனால் உள்நாட்டு மூலங்களிலிருந்தான வெளிநாட்டு நாணயத்திலான தேறிய கடன்பாடுகள் 2013இன் ரூ.143.0 பில்லியனிலிருந்து ரூ.20.3 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சியடைந்தன.

**இவ்வாண்டுப் பகுதியில் நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் வழங்கப்பட்டதன் காரணமாக, வெளிநாட்டு மூலங்களிலிருந்தான தேறிய நிதியிடல் 2013இன் ரூ.123.7 பில்லியனிலிருந்து ரூ.212.5 பில்லியனுக்கு 71.8 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** மொத்த நிதியிடலில் வெளிநாட்டு நிதியிடலின் பங்கு தேறிய அடிப்படையில் 2013இல் 24.0 சதவீதத்திலிருந்து 2014இல் 35.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. இருபுடை மற்றும் பல்புடை மூலங்களிலிருந்தான செயற்றிட்டக் கடன்களிலிருந்தான தேறிய நிதியிடல் முன்னைய ஆண்டின் ரூ.67.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.14.6 பில்லியனுக்கு குறைவடைந்தமைக்கு பல முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் முடிவடைந்துவிட்டமையே காரணமாகும். 2014இல் ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி,

யப்பான் அரசாங்கம் என்பன வெளிநாட்டு நிதியிடலின் முக்கிய மூலங்களாக விளங்கின. செயற்றிட்டக் கடன்களிலிருந்தான மொத்தக் கடன்பாடுகள் ரூ.132.2 பில்லியனாக விளங்கிய வேளையில் மீள்கொடுப்பனவுகள் ரூ.117.6 பில்லியனாக இருந்தன. 2014 இற்காக ஒப்புதலளிக்கப்பட்ட நாட்டிற்கான பன்னாட்டு முறி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஐ.அ.டொலர் 1.5 பில்லியன் காணப்பட்டதுடன் அரசாங்கம் நாட்டிற்கான பன்னாட்டு முறியில் ஐ.அ.டொலர் 1 பில்லியனை 2014 சனவரியிலும் எஞ்சிய ஐ.அ.டொலர் 500 மில்லியனை 2014 ஏப்பிறலிலும் வழங்கியது. இதன்படி, நாட்டிற்கான பன்னாட்டு முறியிலிருந்தான நிதியிடல் ரூ.197 பில்லியனாக விளங்கியது. அதேவேளை, ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட தேறிய வெளிநாட்டு முதலீடுகள் ரூ.15 பில்லியனாக விளங்கிய வேளையில் 2014இல் திறைசேரி உண்டியல்களின் வெளிநாட்டு முதலீடுகள் தொடர்பில் ரூ.14.2 பில்லியன் மீள்கொடுப்பனவுகள் காணப்பட்டன. 2014இல் அரச பிணையங்கள் மீதான வெளிநாட்டு முதலீடுகள் 2013இல் பெறப்பட்ட ரூ.55.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவிற்கு குறைவாகக் காணப்பட்டது.

## 6.4 அரச படுகடனும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும்

### அரச படுகடன்

**மொ.உ.உற்பத்திக்கான அரச படுகடன் விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிப் போக்கு 2014இலும் தொடர்ந்தது.** படுகடன் இருப்பின் அதிகரிப்பை விட உயர் வீதத்தில் வளர்ச்சியடைந்த பெயரளவு மொ.உ.உற்பத்தியுடன், மொ.உ.உற்பத்திக்கான மொத்தப் படுகடன் விகிதம் 2013இன் 78.3 சதவீதத்திலிருந்து 75.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுப் படுகடன் 2013 இறுதியில் 44.2 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 43.7 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தவேளை வெளிநாட்டுப் படுகடன் முன்னைய ஆண்டின் 34.1 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 31.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பெயரளவு நியதிகளில் மொத்த வெளிநின்ற அரச படுகடன் 2013 இறுதியின் ரூ.6,793.2 பில்லியனிலிருந்து 2014 இறுதியில் ரூ.7,390.9 பில்லியனுக்கு 8.8 சதவீதத்தினால் அதிகரித்தது. 2014ஆம் ஆண்டுப் பகுதியில் இலங்கை ரூபா ஐ.அ.டொலர் தவிர்ந்த முக்கிய வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்தமையினால் தோன்றிய செலாவணி வீத வேறுபாடுகளின் காரணமாக மொத்தப் படுகடன் இருப்பு ரூ.89.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது. கழிவிடல் காரணியும் (இது திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் வழங்கல் மற்றும் முதிர்ச்சிகளின் ஏட்டுப்பெறுமதிக்கும் முகப்புப் பெறுமதிக்குமிடையிலான வேறுபாடாகும்) படுகடன் இருப்பு ரூ.25.5 பில்லியனால் வீழ்ச்சியடையப் பங்களித்ததுடன் இதற்கு 2014இல் அரச பிணையங்கள் வட்டத்துடன் வழங்கப்பட்டமையே காரணமாகும்.

**உள்நாட்டுப் படுகடன் இருப்பு 2014 இறுதியில் ரூ.4,277.8 பில்லியனுக்கு ரூ.445 பில்லியனால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமைக்கு வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு உள்நாட்டு மூலங்களில் அதிகளவில் தங்கியிருந்தமையே காரணமாகும்.** மொத்த அரச படுகடனில் உள்நாட்டுப் படுகடனின் பங்கு, 2013 இறுதியில் 56.4 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 57.9 சதவீதத்திற்கு அதிகரித்தது. எனினும், மொத்த உள்நாட்டுப் படுகடனில் குறுங்காலப் படுகடனின் பங்கு 2013 இறுதியின் 23.7 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 22.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதற்குள், குறுங்கால உள்நாட்டுப் படுகடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 2013 இறுதியின் 77.0 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 73.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு முதிர்ச்சியடையும் குறுங்கால படுகடனிற்குப் பதிலாக நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையிலான படுகடன்கள் வழங்கப்பட்டமையே முக்கிய காரணமாகும். இதன்படி, மொத்த உள்நாட்டுப் படுகடன் இருப்பில் நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான படுகடனின் பங்கும் முன்னைய ஆண்டின் 76.3 சதவீதத்திலிருந்து 2014இல் 78.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. மொத்த நடுத்தரத்திலிருந்து நீண்ட காலம் வரையான படுகடனில் திறைசேரி முறிகளின் பங்கு 2013 இறுதியில் பதிவு செய்யப்பட்ட 83.9 சதவீதத்திலிருந்து 85.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. அதேவேளை, உள்நாட்டுப் படுகடன் இருப்பின் முதிர்ச்சிக்கான சராசரிக் காலம் முன்னைய ஆண்டின் 4.8 ஆண்டுகளிலிருந்து 2014 இறுதியில் 5.74 ஆண்டுகளுக்கு அதிகரித்து, 30 ஆண்டு திறைசேரி முறிகள் உட்பட நடுத்தர மற்றும் நீண்ட காலப் பிணையங்களின் வழங்கலைப் பிரதிபலித்தது.

வரைபடம் 6.7 வெளிநின்ற அரச படுகடன்



அட்டவணை 6.6 வெளிநின்ற மத்திய அரசின் படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு)

ரூ.மில்லியன்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| மொத்த அரச படுகடன் | 5,133,365 | 6,000,112 | 6,793,249 | 7,390,899 |
| உள்நாட்டு படுகடன் (அ) | 2,804,085 | 3,232,813 | 3,832,825 | 4,277,783 |
| முதிர்வுகாலத்தின்படி | | | | |
| குறுங்கால | 698,190 | 813,272 | 909,156 | 941,162 |
| நடுத்தர மற்றும் நீண்டகால | 2,105,895 | 2,419,541 | 2,923,670 | 3,336,620 |
| நிறுவனங்களின்படி | | | | |
| வங்கி | 886,221 | 1,060,317 | 1,433,773 | 1,669,882 |
| வங்கியல்லா | 1,917,864 | 2,172,495 | 2,399,053 | 2,607,901 |
| வெளிநாட்டு படுகடன் | 2,329,280 | 2,767,299 | 2,960,424 | 3,113,116 |
| வகைகளின்படி | | | | |
| சலுகைக் கடன்கள் | 1,328,797 | 1,369,568 | 1,492,842 | 1,490,978 |
| சலுகையற்ற கடன்கள் | 235,923 | 455,069 | 460,475 | 457,668 |
| வர்த்தக (ஆ) | 764,560 | 942,662 | 1,007,107 | 1,164,470 |
| நாணயத்தின்படி | | | | |
| சி.எ.உ | 601,691 | 682,065 | 711,935 | 679,835 |
| ஐ.அ.டொலர் | 678,983 | 853,832 | 1,009,937 | 1,292,052 |
| யப்பானிய யென் | 560,456 | 575,196 | 485,325 | 429,638 |
| யூரோ | 146,711 | 174,563 | 185,606 | 162,743 |
| ஏனையவை | 341,439 | 481,643 | 567,621 | 548,848 |
| குறிப்பு : செலாவணிவீத வேறுபாடுகள் | 85,573 | 207,389 | -25,498 | -90,230 |

(அ) 2003 நவம்பரில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்ட ரூ.4,397 மில்லியன் கொண்ட அரசாங்க முறிகள், 2012 சனவரியில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு வழங்கப்பட்ட ரூ.78,447 மில்லியன் மற்றும் 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயார்லைனை மூலதனமாக்குவதற்காக வெளியிடப்பட்ட ரூபா 13,125 மில்லியன் என்பவை நீங்கலாக.

(ஆ) திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் ரூபா குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் வெளிநின்ற தொகைகளை உள்ளடக்குகின்றது.

மூலங்கள் : நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

**2014இல் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையை நிதியிடுவதற்கு வங்கியில்லாத்துறையிலிருந்தான தேறிய நிதியிடல் அதிகரித்தமையுடன், வங்கியல்லா துறையினால் வைத்திருக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன், முன்னைய ஆண்டின் ரூ.2,399.1 பில்லியனிலிருந்து 2014 இறுதியில் ரூ.2,607.9 பில்லியனுக்கு 8.7 சதவீதத்தினால் அதிகரித்தது.** எனினும், வங்கியல்லாத் துறையினால் வைத்திருக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடனின் பங்கு முன்னைய ஆண்டின் 62.6 சதவீதத்திலிருந்து 2014இல் 61.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இருப்பினும் கூட, வங்கியல்லாத் துறையினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்கள் 15.7 சதவீதத்தினால் ரூ.293 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்ததுடன் திறைசேரி உண்யடில்களின் தொடர்பான பங்கு முன்னைய ஆண்டின் 10.6 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 11.2 சதவீதத்திற்கு அதிகரித்தது. மேலும், திறைசேரி முறிகள் மூலமான வங்கியல்லா துறைகளிலிருந்தான கடன்பாடுகள் ரூ.2,249 பில்லியனுக்கு 8.9 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், தொடர்பான பங்கு 2014 இறுதியில் 86.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்து நீண்ட கால முதிர்ச்சிகளுக்காக அதிகரித்த முதலீட்டாளர் முன்னுரிமையை வெளிப்படுத்தியது. வங்கியல்லாத் துறையில் அரச படுகடன் பாரிய உடமையாளர்களாக ஊழியர் சேம நிதியம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பன காணப்பட்ட வேளையில், இவை முறையே 56.5 சதவீத மற்றும் 14.6 சதவீத பங்கைக் கொண்டிருந்தன.

**உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவினால் வைத்திருக்கப்பட்ட அரசின் வெளிநின்ற படுகடன் கடப்பாடுகள் 2014 இறுதியில் ரூ.1,669.9 பில்லியனுக்கு 16.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** இதன்படி, மொத்த உள்நாட்டுப் படுகடனில் வங்கித்தொழில் துறைப் படுகடனின் பங்கு 2013 இறுதியில் 37.4 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 39.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட வெளிநின்ற படுகடன் 2014 இறுதியில் ரூ.267.7 பில்லியனுக்கு 138.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த வேளையில் மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் முன்னைய ஆண்டின் ரூ.3.1 பில்லியனிலிருந்து 2014 இறுதியில் ரூ.123.5 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவில் அதிகரித்ததன் காரணமாக இதன் தொடர்பான பங்கு முன்னைய ஆண்டு இறுதியின் 7.8 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்கு அதிகரித்தது. வர்த்தக வங்கிகள் வசமிருந்த வெளிநின்ற அரச படுகடன் 2013 இறுதியுடன் ஒப்பிடுகையில் ரூ.1,402.2 பில்லியனுக்கு 6.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு வர்த்தக வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி முறிகளின் உடைமை ரூ.595.1 பில்லியனுக்கு 54 சதவீதத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். எனினும், வர்த்தக வங்கிகள் வசமிருந்த திறைசேரி உண்டியல்கள் 2014 இறுதியில் 37.3 சதவீதத்தினால் 278.3 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்து நீண்டகால முதிர்ச்சிகளுடன் கூடிய அரச பிணையங்களுக்கான முன்னுரிமையைப் பிரதிபலித்தன.

**வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் 2013 இறுதியின் ரூ.388.8 பில்லியனிலிருந்து (ஐ.அ.டொலர் 2,973.8 மில்லியன்) 2014 இறுதியில் ரூ.410.7 பில்லியனுக்கு (ஐ.அ.டொலர் 3,134.3 மில்லியன்) அதிகரித்தது.**

வரைபடம் 6.8 வெளிநின்ற உள்நாட்டு படுகடனின் உள்ளடக்கம் - 2014




6

இறைக்கொள்கையும் அரச நிதியும்

2014ஆம் ஆண்டுப் பகுதியில், தேறிய அடிப்படையில் ரூ.21.9 பில்லியன் கொண்ட இலங்கை அபிவிருத்தி முறிகள் வழங்கப்பட்டமையானது ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபா தேய்வடைந்தமையுடன் இணைந்து இவ்வதிகரிப்பிற்குப் பங்களித்தது. வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் இலங்கை அபிவிருத்தி முறிகளிலிருந்தான வெளிநின்ற கடன்பாடுகளான ரூ.391.1 பில்லியனையும் (ஐ.அ.டொலர் 2,984.3மில்லியன்) கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான ரூ.19.7 பில்லியனையும் (ஐ.அ.டொலர் 150 மில்லியன்) கொண்டிருந்தன.

**மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் 2014 இறுதியில் ரூ.3,113.1 பில்லியனுக்கு 5.2 சதவீதத்தினால் அதிகரித்தது.** சலுகை ரீதியான படுகடன் 2013 இறுதியின் ரூ.1,492.8 பில்லியனிலிருந்து 2014 இறுதியில் ரூ.1,491 பில்லியனிற்கு 0.1 சதவீதத்தினால் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த வேளையில் சலுகையல்லாப் படுகடன் 10.5 சதவீதத்தினால் ரூ.1,622.1 பில்லியனுக்கு அதிகரித்தமையின் மூலம் மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் சலுகையல்லாப் படுகடனின் பங்கு 2013 இறுதியின் 49.6 சதவீதத்திலிருந்து 2014 இறுதியில் 52.1 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. சலுகையல்லாப் படுகடனில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் மற்றும் 2014 இறுதியில் ரூ.1,164.5 பில்லியனுக்கு 15.6 சதவீதத்தினால் அதிகரித்த திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகளில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகள் உள்ளிட்ட உயர்ந்த வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளே முக்கிய காரணமாகும்.

**ஆண்டு காலப்பகுதியில் இலங்கை ரூபா பல முக்கிய நாணயங்களுக்கெதிராக உயர்வடைந்ததன் விளைவாக படுகடன் இருப்பு ரூ.89.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது.** இலங்கை ரூபாவானது யப்பானிய யென், இந்திய ரூபா, யூரோ மற்றும் சிறப்பு எடுப்பனவு உரிமை (சிஎஉ) என்பனவற்றிற்கெதிராக

வரைபடம் 6.9 வெளிநின்ற வெளிநாட்டு படுகடனின் உள்ளடக்கம் - 2014




வரைபடம் 6.10 மொத்த வெளிநின்ற படுகடனின் நாணய உள்ளடக்கம் - 2014




முறையே 13.5 சதவீதத்தினாலும் 2.1 சதவீதத்தினாலும் 13.2 சதவீதத்தினாலும் 6.1 சதவீதத்தினாலும் உயர்வடைந்த வேளையில் இவ்வாண்டுப் பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக 0.23 சதவீதத்தினால் தேய்வடைந்தது. அதேவேளை, மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ஐ.அ.டொலர் (41.5 சதவீதம்), சிஎஉ (21.8 சதவீதம்), யப்பானிய யென் (13.8 சதவீதம், யூரோ (5.2 சதவீதம்), இலங்கை ரூபா (14.7 சதவீதம்) மற்றும் ஏனைய நாணயங்கள் (3.0 சதவீதம்) ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்ட படுகடனை உள்ளடக்கியிருந்தது. இதன் விளைவாக, வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் இருப்பு ரூ.90.2 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கியமான வெளிநாட்டு நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் செலாவணி வீத வேறுபாடுகள் காரணமாக இருந்தவேளையில் ஐ.அ.டொலரில் குறித்துரைக்கப்பட்ட வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட உள்நாட்டுப் படுகடன் (இலங்கை அபிவிருத்தி முறிகள் மற்றும் கரைகடந்த வங்கித்தொழில் பிரிவுகளிலிருந்தான கடன்கள்) ரூ.0.9 பில்லியனால் அதிகரித்தமைக்கு இலங்கை ரூபா ஐ.அ.டொலருக்கெதிராக தேய்வடைந்தமையே காரணமாகும்.

## படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்ததன் காரணமாக படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2013இன் ரூ.1,162.9 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.1,076.3 பில்லியனுக்கு ரூ.86.6 பில்லியனால் வீழ்ச்சியடைந்தது.** இதன்படி, கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.632.7 பில்லியனுக்கு ரூ.67.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்த வேளையில் இவ்வாண்டுப் பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.443.6 பில்லியனுக்கு ரூ.19.3 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 58.8 சதவீதத்திற்கு வகைகூறின. உள்நாட்டு மூலங்களுக்கான

வரைபடம் 6.11 அரச படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள் (மொ.உ.உ.இன் சதவீதமாக)




படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2013இன் ரூ.850.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 2014இல் ரூ.73.3 பில்லியனால் ரூ.777.5 பில்லியனுக்கு குறிப்பிடத்தக்களவிற்கு வீழ்ச்சியடைந்தது. இது கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட ரூ.46.5 பில்லியன் கொண்ட வீழ்ச்சியினதும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.26.8 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். வெளிநாட்டுக் கடன்களின் பேரிலான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ரூ.20.9 பில்லியனால் ரூ.183.1 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வெளிநாட்டு மூலங்களுக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 2014இல் ரூ.298.8 பில்லியனுக்கு ரூ.13.4 பில்லியனால் வீழ்ச்சியடைந்தன. எனினும், திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகள் தொடர்பிலான அதிகரித்த வட்டிக் கொடுப்பனவுகளின் விளைவாக 2014இல் வெளிநாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் ரூ.115.7 பில்லியனுக்கு ரூ.7.5 பில்லியனால் அதிகரித்தன.

படுகடன் தீர்ப்பனவுக் குறிகாட்டிகள் 2014இல் **மேம்பட்டன.** வட்டிக் கொடுப்பனவுகளையும் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டின் 13.4 சதவீதத்திலிருந்து 2014இல் 11.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மொ.உ.உற்பத்திக்கான மொத்த வட்டிக் கொடுப்பனவுகளின் விகிதம் 2013இன் 5.3 சதவீதத்திலிருந்து 2014இல் 4.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு உள்நாட்டு சந்தையில் நிலவிய குறைந்த வட்டி வீதங்களுடன் உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணமாக அமைந்தது. மொ.உ.உற்பத்திக்கான உள்நாட்டு வட்டிக் கொடுப்பனவுகள் 2013இன் 4.1 சதவீதத்திலிருந்து 2014இல் 3.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. மேலும், அரசின் மொத்த அரசிறைக்கான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் விகிதம் 2013இன் 102.2 சதவீதத்திலிருந்து 2014இல் 90.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, 2014இல் அரசிறைச் சேகரிப்புக்கள் 5.1 சதவீதத்தினால் மிதமாக அதிகரித்தமைக்கிடையிலும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 7.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமையே காரணமாகும்.

அட்டவணை 6.7 அரச படுகடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகள்

ரூ.மில்லியன்

| விடயம் | 2011 | 2012 | 2013 | 2014 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 895,382 | 1,017,468 | 1,162,900 | 1,076,257 |
| உள்நாடு | 728,028 | 733,100 | 850,748 | 777,488 |
| வெளிநாடு | 167,354 | 284,368 | 312,152 | 298,769 |
| கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் | 538,683 | 608,970 | 700,035 | 632,662 |
| உள்நாடு | 439,894 | 415,441 | 496,042 | 449,554 |
| வெளிநாடு | 98,789 | 193,529 | 203,993 | 183,109 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | 356,699 | 408,498 | 462,865 | 443,595 |
| உள்நாடு | 288,134 | 317,659 | 354,706 | 327,934 |
| குறுங்காலம் | 46,257 | 65,049 | 69,712 | 78,811 |
| நடுத்தர மற்றும் நீண்டகாலம் | 241,877 | 252,610 | 284,994 | 249,123 |
| வெளிநாடு | 68,565 | 90,839 | 108,159 | 115,660 |

மூலங்கள் : நிதி அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி

அட்டவணை 6.8 அரசின் படுகடன் குறிகாட்டிகள்

| குறிக்காட்டிகள் | 2011 | 2012 | 2013 | 2014 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| அரசபடுகடன்/மொ.உ.உ | 78.5 | 79.2 | 78.3 | 75.5 |
| உள்நாட்டு படுகடன்/மொ.உ.உ | 42.9 | 42.7 | 44.2 | 43.7 |
| வெளிநாட்டு படுகடன்/மொ.உ.உ | 35.6 | 36.5 | 34.1 | 31.8 |
| மொத்த வெளிநாட்டு படுகடன்/ஏற்றுமதிகள்(அ) | 154.4 | 159.9 | 151.9 | 142.5 |
| மொத்தப்படுகடன் பணி/மொ.உ.உ | 13.7 | 13.4 | 13.4 | 11.0 |
| மொத்தப்படுகடன் பணி/ அரசிறை (ஆ) | 92.5 | 96.8 | 102.2 | 90.0 |
| இதில் உள்நாட்டுப்படுகடன் பணி/ அரசிறை (ஆ) | 75.2 | 69.7 | 74.8 | 65.1 |
| மொத்தப்படுகடன் பணி/ அரச செலவினம் (இ) | 45.4 | 47.0 | 49.1 | 44.3 |
| இதில் உள்நாட்டுப்படுகடன் சேவை/அரசு செலவினம் (இ) | 36.9 | 33.9 | 35.9 | 32.0 |
| வெளிநாட்டு படுகடன் பணி/ஏற்றுமதிகள் (அ) | 11.1 | 16.4 | 16.0 | 13.7 |
| மொத்த வட்டி/மொ.உ.உ | 5.5 | 5.4 | 5.3 | 4.5 |
| உள்நாட்டு வட்டி/மொ.உ.உ | 4.4 | 4.2 | 4.1 | 3.4 |
| உள்நாட்டு வட்டி/அரச நடைமுறைச் செலவினம் | 28.1 | 28.1 | 29.4 | 24.8 |
| வெளிநாட்டு வட்டி /ஏற்றுமதிகள் (அ) | 4.5 | 5.2 | 5.5 | 5.3 |

(அ) பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகள்
(ஆ) அரச வருமானம் பொருளாதார வடிவமைப்பில் உள்ளது
(இ) அரச செலவினம் கடன் தீர்ப்பனவு கொடுப்பனவுகளை உள்ளடக்குகிறது

மூலங்கள் : நிதி அமைச்சு
தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

## முக்கிய நிதியியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற படுகடன்

முக்கிய நிதியியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற படுகடன் 2013இன் 26.1 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 2014 இறுதியில் 17.8 சதவீதத்தினால் ரூ.754.7 பில்லியனுக்கு அதிகரித்தது. உள்நாட்டு வர்த்தக வங்கிகளிலிருந்தான நிதியியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் உள்நாட்டுப் படுகடன் 2014இல் 22.2 சதவீதத்தால் ரூ446.0

**அட்டவணை 6.9 முக்கிய நிதியில்லா அரச கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற படுகடன் (ஆண்டு முடிவில் உள்ளவாறு)**

| கூட்டுத்தாபனம் | 2012 | 2013 | 2014 (அ) |
|---|---|---|---|
| ரூ. மில்லியன் | | | |
| **உள்நாட்டுப் படுகடன் (ஆ)** | **292,477** | **365,098** | **446,047** |
| இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் | 201,378 | 223,433 | 245,618 |
| இலங்கை மின்சார சபை | 43,590 | 46,974 | 47,384 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 5,370 | 7,074 | 11,801 |
| வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 5,167 | 23,324 | 58,325 |
| இலங்கை உரக் கூட்டுத்தாபனம் | 11,521 | 21,920 | 30,593 |
| கொழும்பு வர்த்தக வளமாக்கிகள் | 4,284 | 10,088 | 13,342 |
| சிறிலங்கன் எயார்லயின்ஸ் | 2,853 | 9,233 | 9,055 |
| நெல் சந்தைப்படுத்தல் சபை | 4,693 | 6,700 | 5,574 |
| தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை | 1,625 | 3,386 | 4,777 |
| ஏனைய கூட்டுத்தாபனங்கள் | 11,998 | 12,967 | 19,578 |
| **வெளிநாட்டுப் படுகன் (இ)** | **216,001** | **275,850** | **308,673** |
| இலங்கை மின்சார சபை | 135,937 | 153,429 | 160,195 |
| இலங்கை துறைமுக அதிகாரசபை | 59,203 | 96,953 | 122,568 |
| வரையறுக்கப்பட்ட (இலங்கை) விமானநிலையம் மற்றும் விமான சேவைகள் | 20,861 | 25,469 | 25,909 |
| **நிதியில்லா அரச கூட்டுத்தாபனங்களின் மொத்தப்படுகடன்** | **508,478** | **640,948** | **754,720** |
| மொ.உ. உற்பத்தியின் சதவீதமாக | | | |
| **உள்நாட்டுப் படுகடன்** | **3.9** | **4.2** | **4.6** |
| **வெளிநாட்டுப் படுகடன்** | **2.9** | **3.2** | **3.2** |
| **மொத்தப்படுகடன்** | **6.7** | **7.4** | **7.7** |

(அ) தற்காலிகமானது

(அ) வர்த்தக வங்கிகளில் இருந்தான கடன் பெறுகைகளின் வெளிநின்ற பெறுமதி

(இ) வெளிநாட்டு செயற்திட்ட நிதியிடலின் வெளிநின்ற படுகடனை உள்ளடக்குகின்றது.

மூலங்கள்: நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

பில்லியனுக்கு அதிகரித்த அதேவேளை செயற்றிட்டங்கள் தொடர்பான வெளிநாட்டுப் படுகடன் 11.9 சதவீதத்தால் ரூ308.7 பில்லியனுக்கு அதிகரித்தது. மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, முக்கிய நிதியியல்லா அரச கூட்டுத்தாபனங்களின் வெளிநின்ற படுகடன் முன்னைய ஆண்டின் 7.4 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2014 இறுதியில் 7.7 சதவீதமாக இருந்தது.

## 6.5 துணைத் தேசிய அரசாங்கங்களின் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள்

### துணைத் தேசிய அரசாங்கங்களின் கொள்கைப் பணிப்புரைகளும் வழிமுறைகளும்

**இலங்கையில் துணைத் தேசிய அரசாங்க முறைமை மாகாண சபைகளையும் உள்ளூராட்சி மன்றங்களையும் உள்ளடக்கியுள்ளது.** இதன்படி, யாப்பிற்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் ஒன்பது மாகாண சபைகள் உருவாக்கப்பட்டிருப்பதுடன் இலங்கையின் உள்ளூராட்சி முறைமை 335 நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது. 2014 இறுதியிலுள்ளவாறு உள்ளூராட்சிமன்ற முறைமை 23 மாநகர சபைகளையும் 41 நகர சபைகளையும் 271 பிரதேச சபைகளையும் உள்ளடக்கியுள்ளது.

**உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் அமைச்சு 2014இல் துணை தேசிய அரசாங்க மட்டத்திலான அபிவிருத்தி செயற்பாட்டிற்கு இன்றியமையாத பங்கினைத் தொடர்ந்தும் ஆற்றியது.** துணைத் தேசிய அரசாங்க அதிகாரசபைகளின் முதலீட்டுத் தேவைகளுக்கு வசதியளிப்பதற்காக அமைச்சு கொடை முகவர்களுடன் காத்திரமான முறையில் தொடர்புகளை ஏற்படுத்திய வேளையில் மாகாண மட்டங்களிலும் உள்ளூராட்சி மன்ற மட்டங்களிலும் அபிவிருத்தித் தேவைப்பாடுகளை முன்னுரிமைப்படுத்தும் செயற்பாடுகளுக்கு உதவிகளை வழங்கியது. மேலும், பொதுமக்களுக்கு சிறந்த பணிகளை வழங்குவதற்காக 2014இல் உட்கட்டமைப்பு வசதிகளும் முகாமைத்துவ திறன்களும் மேம்படுத்தப்பட்டன. உயர்தரப் பணிகளை வழங்குவதற்காகவும் பொதுமக்களுக்கு அந்தந்த நேரத்தில் தேவையான பணிகளை வழங்குவதற்காகவும் அமைச்சினால் பல நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இதன்படி, சுகாதார அமைச்சின் ஆதரவுடன் 2014இல் கழிவு முகாமைத்துவம் மற்றும் டெங்கு ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ ஆதரவு மையத்தினூடாகத் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்காக அமைச்சு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொண்டது.

**தெரிந்தெடுக்கப்பட்ட அபிவிருத்தி குறைந்த உள்ளூராட்சி மன்றங்களினுடைய உட்கட்டமைப்புப் பணிகளை மேம்படுத்தும் நோக்குடன் உள்ளூராட்சி மன்றங்கள் மேம்பாட்டுத் துறைச் செயற்றிட்டம் (புறநெகும நிகழ்ச்சித்திட்டம்) 2014இலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.** இதன்படி, 108 உள்ளூராட்சி மன்றங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இச்செயற்றிட்டமானது உள்ளூராட்சி மன்றங்களின் நிறுவன ரீதியான இயளலவினை அபிவிருத்தி செய்வதற்கு ஆதரவளிப்பதனையும் வியாபாரச் செயன்முறை மீளப்பொறியற்படுத்தல் மற்றும் அவற்றின் தகவல் தொழில்நுட்பவியல் முறைமைகளை அபிவிருத்தி செய்தல் என்பனவற்றையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

**பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளின் கீழ் 2014இல் வீதி அபிவிருத்திகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.** இதன்படி, உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் யப்பான் பன்னாட்டு ஒத்துழைப்பு முகவர் ஆகியோரிடமிருந்தான நிதி உதவியுடன் கிழக்கு, ஊவா, வடக்கு, வட மத்திய, சப்பிரகமுவா மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள மாகாண வீதிச் செயற்றிட்டங்களை உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகளின் அமைச்சு நடைமுறைப்படுத்தியது. ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான நிதி உதவியுடன் மாகாண வீதிகளின் இணைப்பினை மேம்படுத்துகின்ற நோக்குடன் வடபகுதி வீதிகள் இணைப்புச் செயற்றிட்டம்

நடைமுறைக்கிடப்பட்டது. மேலும், ஆண்டுப் பகுதியில், கொழும்பு பெரும்பாக கழிவு நீர் முகாமைத்துவச் செயற்றிட்டம், அனர்த்த பதிலிறுப்பு வலையமைப்பினை தரமுயர்த்தல் (கட்டம் II), அறிவுத்தளத்தின் அத்திவாரமாக பள்ளிக்கூடக் கல்வியை மாற்றியமைத்தல் செயற்றிட்டம் மற்றும் பல நகர அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் என்பனவும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன.

**சமச்சீரான பிரதேச வளர்ச்சியை எய்தும் நோக்குடன், மாகாண சபைகள் தமது வரவு செலவுத்திட்டத்தின் பரந்தளவிலான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் விதத்தில் அவற்றுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களை விதந்துரைக்கின்ற மிக இன்றியமையாததான வகிபாகத்தினை நிதி ஆணைக்குழு தொடர்ந்தும் ஆற்றியது.** 2014இல் நிதி ஆணைக்குழு மாகாண மட்டத்திலான ஒதுக்கு தீர்மானங்களை மிகத் தெளிவாக மேற்கொள்ளும் பொருட்டு 2015 இலிருந்து ஆரம்பித்து பல்வேறு துணைத் துறைகளுக்கும் மாகாண ரீதியான அபிவிருத்திக் கொடைகளின் ஒதுக்கினை பிரிக்கும் விதத்தில் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொண்டது. மேலும், மாகாணங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மூலதன நிதிகளின் கீழ் நிருவாகச் செலவு ஏற்பாடுகளை (ஒப்பந்தப் பெறுமதியில் உயர்ந்தபட்சம் 5 சதவீதம்) இரத்துச் செய்வதற்கு நிதி ஆணைக்குழு தீர்மானித்திருக்கிறது. நிதி ஆணைக்குழுவின்படி மூலதனச் செயற்றிட்டங்களுக்கான மூலவள ஒதுக்கங்கள் போதுமானதாக இருக்காமையும் ஒதுக்கத்திற்கெதிரான நிதியம் குறைந்தளவில் பகிர்ந்தளிக்கப்பட்டமையும் மாகாண சபைத் தொழிற்பாடுகளுடன் தொடர்பான முக்கிய தடைகளாகக் காணப்பட்டன.

## மாகாண சபைகளின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகள்

**2014இல் மாகாண சபைகளின் மொத்த அரசிறைச் சேகரிப்புக்கள் தொடர்ந்தும் அதிகரித்தன.** மொத்த அரசிறை 2013இன் ரூ.49.6 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.58.6 பில்லியனுக்கு 18 சதவீதத்தினால் அதிகரித்த வேளையில், மொ.உ.உற்பத்திக்கான சதவீதமாக இது 2014 இல் 0.6 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. வரி அரசிறை 2014இல் ரூ.52.1 பில்லியனுக்கு 22.5 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில், வரியல்லா அரசிறை 9.3 சதவீதத்தினால் ரூ.6.4 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. மத்திய அரசாங்கத்திலிருந்து மாற்றல் செய்யப்பட்ட தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி அரசிறை ரூ.22.3 பில்லியனுக்கு 28.9 சதவீதத்தினால் அதிகரித்தது. 2014இல் முத்திரைத் தீர்வையிலிருந்தான அரசிறை ரூ.21.7 பில்லியனுக்கு 23.3 சதவீதத்தினால் அதிகரித்தது. இதேபோன்று, உரிமக் கட்டணத்திலிருந்தான அரசிறை 2014இல் 7.4 பில்லியனுக்கு 12.1 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உந்து ஊர்திகளின் பதிவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முக்கிய காரணமாகும். 2014இல் மத்திய அரசிலிருந்தான தேசத்தினைக் கட்டியெழுப்பும் வரி அரசிறை மாற்றல்கள் மாகாண சபையின் மொத்த வரி அரசிறையில் 42.7 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் அதனைத் தொடர்ந்து முத்திரைத் தீர்வை மொத்த வரி அரசிறையில் 41.7 சதவீதத்திற்கு வகைகூறியது. அரசிறைச் சேகரிப்பில் மேல் மாகாண சபையின் தொடர்பான பங்கு 60.5 சதவீதத்திலிருந்து 53.2 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, ஏனைய மாகாணங்களில் பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்தமையுடன் இம்மாகாண சபைகளில் அரசிறை அதிகரித்தமையைப் பிரதிபலித்தது. மேல் மாகாணத்தினைத் தொடர்ந்து வட மேல் மாகாணம், தென் மாகாணம் மற்றும் மத்திய மாகாணங்கள் விளங்கி மாகாண சபைகளின் மொத்த இறைச் சேகரிப்பில் முறையே ஏறத்தாழ 9.9 சதவீதத்திற்கும் 9.1 சதவீதத்திற்கும் 8.9 சதவீதத்திற்கும் வகைகூறின.

**மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினம் 2013இன் ரூ.156.1 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.180.2 பில்லியனுக்கு 15.5 சதவீதத்தினால் அதிகரித்தது.** மாகாண சபைகளின் மீண்டெழும் செலவினம் 2014இல் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக முன்னைய ஆண்டினைப் போலவே 1.8 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. தனியாள் ஊதியங்கள், மீண்டெழும் செலவினத்தில் தனிப்பெரும் விடயமாக விளங்கி 2014இல் மாகாண சபைகளின் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 71.8 சதவீதத்திற்கு வகைகூறின. கல்வி மற்றும் நலத் துறையின் தனியாள் ஊதியங்கள் மொத்த தனியாள் ஊதியச் செலவுப்பட்டியலில் ஏறத்தாழ 90 சதவீதத்திற்கு வகைகூறின. 2014இன் மொத்த மீண்டெழும் செலவினத்தில் 89.5 சதவீதத்திற்கு கல்வி மற்றும் நலத்துறைகள் வகைகூறியதுடன் தொழிற்பாட்டு அடிப்படையில் சமூக உட்கட்டமைப்பின் மீதான நடைமுறைச் செலவினம் ரூ.161.2 பில்லியனுக்கு

அட்டவணை 6.10 மாகாண சபைகளுக்கான வரவு செலவுத்திட்ட வெளிப்பாடு

ரூ.மில்லியன்

| விடயம் | 2011 | 2012 | 2013 திருத்தப்பட்டது | 2014 தற்காலிகமானவை |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை** | **40,990** | **49,235** | **49,648** | **58,562** |
| வரி வருமானம் | 34,658 | 41,657 | 42,569 | 52,145 |
| வரி அல்லா வருமானம் | 6,332 | 7,578 | 7,079 | 6,418 |
| **மொத்த செலவினம்** | **157,373** | **161,341** | **185,241** | **212,967** |
| நடைமுறைச் செலவினம் | 129,600 | 139,121 | 156,066 | 180,209 |
| இதில் தனிப்பட்ட ஊதியம் | 101,886 | 108,246 | 117,806 | 129,466 |
| மூலதனச் செலவினம் | 27,773 | 22,220 | 29,175 | 32,759 |
| **மத்திய அரச மாற்றல்கள்** | **116,383** | **112,106** | **135,593** | **154,405** |
| திரட்டிய கொடைகள் | 94,603 | 91,892 | 108,801 | 126,144 |
| பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட கொடைகள் | 3,854 | 2,861 | 2,264 | 2,299 |
| குறிப்பாக மாகாணத்திற்கான அபிவிருத்திக் கொடைகள் (அ) | 9,953 | 5,901 | 6,429 | 9,136 |
| சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான பன்னாட்டுக் கொடைகள் | 7,973 | 11,452 | 18,100 | 16,826 |

மூலங்கள் : பொது நிருவாக அமைச்சு, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக ஆட்சி
நிதி அமைச்சு

6

இறைக்கொள்கையும் அரச நிதியும்

16.6 சதவீதத்தினால் அதிகரித்தது. மீதி 10.5 சதவீதமான மீண்டெழும் செலவினம் மாகாண ரீதியான நிருவாகம் மற்றும் உட்கட்டமைப்புடன் தொடர்பான செலவுகளின் பேரிலானதாக இருந்தது. அதேவேளை, மேல் மாகாணம் தொடர்ந்தும் பாரிய செலவிடல் அலகாக விளங்கி மொத்த மீண்டெழும் செலவினத்தில் 22.6 சதவீதத்திற்கு வகைகூறியது.

**மாகாண சபைகளின் மூலதனச் செலவினம் 2013இன் ரூ.29.2 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.32.8 பில்லியனுக்கு 12.3 சதவீதத்தினால் அதிகரித்தது.** மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக, மாகாண சபைகளின் மூலதனச் செலவினம் 2014இல் 0.3 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. 2014இல் சிறப்புச் செயற்றிட்டங்கள் மீது உறப்பட்ட செலவினம் ரூ.16.8 பில்லியனாக இருந்தவேளையில், ரூ.9.1 பில்லியனானது மாகாணங்களுக்கேயுரிய சிறப்பு அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பில் உறப்பட்டது. மற்றைய மாகாண மட்டங்களில் உறப்பட்ட முதலீடுகள் முக்கியமாக மூலதனச் சொத்துக்களின் கையேற்பு மற்றும் மேம்பாடு மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான மாற்றல்கள் தொடர்பானவையாகக் காணப்பட்டன.

**மாகாண சபைகளுக்கான மத்திய அரசாங்கத்தின் மாற்றல்கள் 2013இன் ரூ.135.6 பில்லியனிலிருந்து 2014இல் ரூ.154.4 பில்லியனுக்கு 13.9 சதவீதத்தினால் அதிகரித்தன.** இம்மாற்றல்கள் தொகை வடிவிலான கொடைகள், பிரமாணத்தினை அடிப்படையாகக் கொண்ட கொடைகள், மாகாண ரீதியாகக் குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகள் மற்றும் சிறப்புச் செயற்றிட்டங்களுக்கான கொடைகள் ஆகியவற்றின் வடிவத்தில் காணப்பட்டன. மாகாண சபைகளின் நடைமுறைச் செலவின நிகழ்ச்சித்திட்டத்தின் மூலவள இடைவெளியினை நிரப்புவதற்கான தொகை வடிவிலான கொடைகள் தொடர்ந்தும் மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களில் மிகப் பெரும் அளவினதாக அமைந்து ரூ.126.1 பில்லியனாக (மொத்த மாற்றல்களில் 81.7 சதவீதம்) விளங்கியது. மாகாண ரீதியான குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்திக் கொடைகளின் கீழான மாற்றல்கள் 2014இல் ரூ.9.1 பில்லியனாகக் காணப்பட்டன. தற்றுணிபு ரீதியிலான செலவினத் தேவைப்பாடுகளுக்கு நிதியிடும் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்ட கொடைகள் 2014இல் ரூ.2.3 பில்லியனாகக் காணப்பட்டன. அதேவேளை, மாகாண சபைகளின் செலவினத்தில் 72.5 சதவீதம் மத்திய அரசாங்கத்தின் மாற்றல்களின் மூலம் நிதியிடப்பட்டது. முன்னைய ஆண்டின் இது தொடர்பான ஒப்பீட்டுத் தொகை 73.2 சதவீதமாகக் காணப்பட்டது. ஆகவே, மாகாண சபைகள் மத்திய அரச வரவு செலவுத்திட்டத்தில் தங்கியிருப்பதைக் குறைக்கும் பொருட்டு மாகாண சபைகளின் அரசிறைத் திரட்டல்களை அதிகரிப்பது இன்றியமையாததாக இருக்கின்றது.